# ஆரம்பக்கல்வி




ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ 3] [தனி இதழ் 25 ந. பை.

மலர் 27 | ஜூன் 1965 | இதழ் 6

# இமயத்தில் நாம்!
# இணையற்ற வெற்றி!!

"மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கும் மாபெரும் வெற்றி."

"இந்தியாவின் பெருமையை உயர்த்தும் இணையற்ற சாதனை."

"உலக வரலாற்றில் இடம் பெற்றுவிட்ட உன்னதமான நிகழ்ச்சி."

"ஒவ்வொர் இந்தியனின் உள்ளத்திலும் இடம் பெற்றுவிட்ட ஒப்பற்ற சம்பவம்."

"பூரிப்பையும் பெருமையையும் அளிக்கும் பொன்னான செயல்."

"மனித குலத்தின் ஆற்றலை விளக்கும் மாண்புமிக்க வெற்றி."

உலகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து இத்தகைய பாராட்டுச் செய்திகளும் வாழ்த்துரைகளும் வந்து குவிந்தபடி இருக்கின்றன— சென்ற சில வாரங்களாக.

முற்றிலும் இந்தியர்களையே கொண்ட ஒரு மலையேறும் குழுவினர், சென்ற திங்களில் நான்கு முறை, இமயமலையின் எவரெஸ்ட் உச்சியை அடைந்து, அங்கே நம் தாய்த் திருநாட்டின் வெற்றிக் கொடியை நாட்டிவிட்டு வந்திருக்கிறார்கள். ஈடு இணையற்ற இந்தச் சாதனையைக் கண்டுதான், பல்வேறு நாடுகளிலிருந்து பாராட்டுச் செய்திகள் அடுக்கடுக்காக வந்தபடி இருக்கின்றன.

பல்வேறு அடுக்குகளைக் கொண்ட இமய மலையின் மிக உயர்ந்த முனையாகத் திகழ்வது எவரெஸ்டின் உச்சிதான். அது மட்டுமல்ல. உலகத்தில் உள்ள ஏனைய மலைகள் யாவற்றையும் விட மிகக் கூடுதலான உயரத்தைப் பெற்றிருப்பதும் எவரெஸ்ட் மலைதான். இந்த மாபெரும் உலகத்தின் மிக உயர்ந்த முனையாகத் திகழும் எவரெஸ்ட் உச்சியை அடைவது, எண்ணி எண்ணி மகிழத்தக்க ஏற்றமிகும் நிகழ்ச்சி என்பதை யார் மறுக்க முடியும்? அத்தகைய அற்புதமான சாதனையை, நான்கு தினங்களில், ஒரு முறை அல்ல—இரு முறை அல்ல; நான்கு முறை நிகழ்த்தியிருக்கிறது இந்தியக் குழு. பத்தொன்பது பேர்களைக் கொண்டது இந்தக் குழு. இந்த அரிய குழுவின் தலைவராகத் திகழ்பவர், லெப்டினன்ட் கமாண்டர் எம். எஸ். கோலி என்பவர்.

இந்தக் குழுவைச் சேர்ந்த காப்டன் ஏ. எஸ். சீமா, நவாங் கொம்பு ஆகிய இருவரும் 20-5-65 வியாழக்கிழமையன்று எவரெஸ்ட் முனையை அடைந்து அங்கே இந்தியக் கொடியை நாட்டினர்.

இந்த வெற்றிச் செய்தியானது இந்திய மக்களின் உள்ளங்களையெல்லாம் இன்பத் தென்றலால் தாலாட்டிக்கொண்டிருக்கும் நேரத்திலேயே மற்றொரு வெற்றிச் செய்தி கிடைத்தது. இதே குழுவைச் சேர்ந்த சோனம் கியாஸ்டோ, சோனம் வாங்கியால் ஆகிய இருவரும் 22-5-65 சனிக்கிழமையன்று எவரெஸ்ட் உச்சியை அடைந்தனர் என்பதே அந்தச் செய்தி.

அடுத்தடுத்து வந்த இந்த இரண்டு வெற்றிச் செய்திகளாலும் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் பூரிப்பும் அடைந்திருந்த இந்திய மக்களின் நெஞ்சங்களுக்கு மற்றும் இரு வெற்றிச் செய்திகள் கிடைத்தன. அதே குழுவைச் சேர்ந்த வி. பி. வோரா அங்காமி என்னும் இருவர், 24-5-65 திங்கட்கிழமையன்றும், அக் குழுவின் வேறு மூன்று உறுப்பினர்களாகிய கேப்டன் அலுவாலியா, எச். சி. எஸ். ரேவாட், பூடோர்ஜி ஆகிய மூவரும் 29-5-65 சனிக்கிழமையன்றும், எவரெஸ்ட் உச்சியை வெற்றிகரமாக அடைந்தனர் என்பவையே அச் செய்திகள்.

இந்திய மலையேறும் குழுவினர்,
20—5—65
22—5—65
24—5—65
29—5—65

ஆகிய நான்கு நாட்களில், ஓங்கி உயர்ந்து விண்ணை இடித்து நிற்கிற எவரெஸ்ட் உச்சியை நான்கு முறை வெற்றி கண்டனர் என்னும் செய்தி, இந்தியாவின் மதிப்பை உலகெங்கும் உயர்த்தியிருக்கிறது. இது எழுத்துக்கு எழுத்து உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

“இந்தக் குழுவினர் அடுத்தடுத்து நான்கு முறை எவரெஸ்ட் உச்சியை எட்டியிருப்பது மாபெரும் சாதனை. இது குறித்து ஒவ்வோர் இந்தியரும் பெருமிதம் அடைவர் என்பதில் துளியும் ஐயமில்லை. ஒரே குழுவைச் சேர்ந்த ஒன்பது பேர் இந்த மாபெரும் மலை உச்சியை எட்டியிருப்பது, அவர்கள் ஒவ்வொருவரிடமும் காணப்படும் அஞ்சாத நெஞ்சத்தையும் திறமையையும் கூட்டு உழைப்பையும் எடுத்துக் காட்டுகிறது” என்று, இந்தியக் குடியரசின் தலைவர் **டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள்,** பெருமையோடும் பூரிப்போடும் தெரிவித்துள்ளார்கள். டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களின் இந்த எழில் உரை, அவருடைய உள்ளத்தை மட்டும் படம் பிடித்துக் காட்டுவது அன்று; இந்திய நாட்டைச் சேர்ந்த நாற்பத்து நான்கு கோடி மக்களின் உள்ளங்களிலும் வீசிக்கொண்டிருக்கும் மகிழ்ச்சித் தென்றலையும் எடுத்துக் காட்டுவது ஆகும்.

“எனக்கு ஈடு இணை யார் உண்டு இந்தப் பரந்த உலகத்தில்?” என்று கேட்காமல் கேட்டபடி இறுமாந்து நிற்கிற எவரெஸ்ட் உச்சி, மானிட சாதியின் காலடிகளுக்குப் பணிந்து நிற்பது, இது முதல் முறை அல்ல—நான்காம் முறை.

உலக வரலாற்றிலேயே முதன் முறையாக எவரெஸ்ட் முடியின் மீது தன் காலடியைப் பதித்தவரும் ஓர் இந்தியர்தான் என்பதும், **டென்சிங் நார்க்கே** என்பது அந்த வீரத் திருமகனின் பெயர் என்பதும், உலகம் அறிந்த உண்மைகள். ஆனால் அவர் சென்றதும், எவரெஸ்டை வென்றதும், பிரிட்டிஷ் மலையேறும் குழுவின் ஓர் உறுப்பினர் என்ற முறையில் இந்தியக் குடிமகனாகிய டென்சிங் நார்க்கேயும், பிரிட்டிஷ் குடிமகனாகிய எட்மண்ட் ஹில்லாரியும், பிரிட்டிஷ் மலையேறும் குழுவின் உறுப்பினர்கள் என்ற முறையில், முதன் முறையாக எவரெஸ்டை வெற்றி பெற்றது, 1953ஆம் ஆண்டில்,

இரண்டாம் முறையாக எவரெஸ்ட், மனித சமுதாயத்தின் முயற்சிக்குத் தலைவணங்கி நின்றது, 1956ஆம் ஆண்டில். இம்முறை

வெற்றிக் கொடியை நாட்டி வீர முழக்கமிட்ட குழு சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்தது. 1956ஆம் ஆண்டின் மே திங்கள் 23, 24 ஆகிய இரு நாட்களில், இந்தக் குழு, எவரெஸ்ட் மீது இரண்டு முறை ஏறி நின்றது.

மறுபடியும் எவரெஸ்ட் மீது வெற்றிக்கொடி ஏற்றப்பட்டது, 1963ஆம் ஆண்டில். இம்முறை வெற்றிபெற்ற பெருமை, அமெரிக்க நாட்டினுடையது. அந்த ஆண்டின் மே திங்கள் முதல் நாளில், அந்தக்குழுவின் ஒரு பகுதியினரும், இரண்டாம் நாளில், அக் குழுவின் வேறு இரு பகுதியினர் வெவ்வேறு திசைகளிலிருந்து தனித் தனியாகவும், ஆக மொத்தம் மூன்று முறை, எவரெஸ்ட் உச்சியைப் பணிய வைத்தனர்.

மறுபடியும் மனித சமுதாயம் எவரெஸ்ட் மலையை அடக்கிக் காட்டியிருக்கிறது—இப்போது—இந்தியக் குழுவின் மூலமாக.

எவரெஸ்ட் உச்சியை, ஒரு முறை வென்றது பிரிட்டிஷ் குழு; இரு முறை வென்றது சுவிட்சர்லாந்துக் குழு; மூன்று முறை வென்றது அமெரிக்கக் குழு; ஆனால் இந்தியக் குழுவோ நான்கு முறை வென்றிருக்கிறது. வேறு எந்த நாட்டின் மலையேறும் குழுவும் இது வரை எவரெஸ்ட் முடியை நான்கு முறை வென்றதில்லை. ஆகையால் தான், இந்தத் துறையில் இந்தியக் குழுவின் சாதனை இணையற்றது என்று உலக அறிஞர்களால் ஒருமுகமாகப் பாராட்டப்படுகிறது.

அஞ்சாத நெஞ்சு, அசையாத உறுதி, இடைவிடாத முயற்சி, தோல்விகள் கண்டு துவளாத போக்கு, தேவையான ஏற்பாடுகள் யாவற்றையும் முன்கூட்டியே கண்டறிந்து தக்கமுறையில் உருவாக்குதல், முந்திய குழுக்களின் அனுபவங்கள் அளிக்கும் பாடங்களைப் பயின்று உணர்தல் ஆகிய இத்தனையும் ஒன்று சேர்ந்ததன் விளைவாகக் கிடைத்த வெற்றிதான இந்தியக் குழுவுக்குக் கிடைத்திருப்பது.

இந்தியாவைச் சேர்ந்த வேறு இரு மலையேறும் குழுவினர், 1960ல் ஒரு முறையும், 1962ல் ஒரு முறையும் எவரெஸ்ட் உச்சியை அடைய முயன்று, முயற்சி வெற்றிபெற முடியாமல், திரும்பி விட்டனர். ஆனால் அந்தத் தோல்விச் செய்திகளைக் கேட்டு மனம் உடைந்து மூலையில் ஒதுங்கிவிடவில்லை தற்போதைய குழுவினர். அத் தோல்விகள் ஏற்படுவதற்குரிய காரணங்கள் என்னென்ன என்பதைக் கண்டறிந்து, அக் காரணங்களை அகற்றுவதற்கான ஏற்பாடுகள் யாவற்றையும் உருவாக்கி வெற்றியைப் பெற்றளித்துள்ளனர், தங்களைப் பெற்றெடுத்த பொன்னாட்டிற்கு.

எவரெஸ்ட் உச்சியை அடைவதற்கான பயணத்தை இந்தக் குழுவினர் புது டில்லியிலிருந்து தொடங்கியது, பிப்ரவரித் திங்கள் 22ஆம் நாள்.

17,800 அடி உயரத்தில் இந்தக் குழுவினர் தங்கள் நடவடிக்கை முகாமை அமைத்தது, ஏறத்தாழ ஒரு திங்களுக்குப பின்னர்.

தங்கள் உள்ளத்தைக் கவர்ந்த உயரிய குறிக்கோளை அவர்கள் அடைந்தது, மே திங்கள் 20ஆம் நாள்.

ஆம்! எண்பத்தாறு நாட்களின் இடையறாத முயற்சியின் விளைவாகக் கிடைத்த கனிதான் இந்த வெற்றி. "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?" என்பது செந்தமிழ் நாட்டின் சீரிய பழமொழி. இந்த அரிய மொழியின் ஆழமான கருத்து, முழு உண்மையாகி விட்டது, இந்தியக் குழுவின் மனம் தளரா முயற்சியைப் பொறுத்த வரை.

இந்தக் குழுவின் சார்பில் முதலில் எவரெஸ்ட் உச்சியை அடைந்த இரு பெரும் வீரர்களில் ஒருவராகிய நவாங் கொம்பு அவர்கள், அவருக்கு அவருடைய மாமனும் எவரெஸ்ட் வீரருமாகிய டென்சிங் நார்கேயால் அன்பளிப்பாகத் தரப்பட்டிருந்த கருணைக்கடல் புத்தர் பெருமானின் சிலை ஒன்றை, அங்கே வைத்துவிட்டு வந்துள்ளார்.

உலகத்தின் மிக உயர்ந்த இடம் எவரெஸ்ட் உச்சி என்றால், மனித சமுதாயத்தின் மிகச் சிறந்த பெருமக்களில் ஒருவர் புத்தர் பெருந்தகை. மிக உயர்ந்த இடத்தில் மிகச் சிறந்த பெருமகனின் சிலை இருப்பது மிகப் பொருத்தமான நிகழ்ச்சியே அல்லவா?

இந்தியாவின் பெருமையை உலக அரங்கத்தில் உயர்த்தியுள்ள இம் மலையேறும் குழுவின் தலைவர் தளபதி கோலி அவர்களையும், குழுவின் பிற உறுப்பினர்கள் பதினெட்டுப் பேரையும், இந்தியப் பெருமக்கள் அனைவரையும் போலவே, "ஆரம்பக் கல்வி" இதழானது, மட்டற்ற மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறது; மனமார வாழ்த்துகிறது; மீண்டும் மீண்டும் போற்றிப் புகழ்கிறது. குறிப்பாகவும் சிறப்பாகவும், எவரெஸ்ட் உச்சியை அடைந்து வெற்றிக்கொடியைப் பட்டொளி வீசிப் பறக்கும்படி செய்த பெரு வீரர்கள் ஒன்பது பேருக்கும் "ஆரம்பக் கல்வி", தன் இதயம் நிறைந்த வாழ்த்துகளை உரிமையாக்குகிறது.

ஒன்பதின்மர் பெற்றுள்ள இந்த ஒப்பற்ற வெற்றி, இத்தகைய வெற்றிகள் இன்னும் பலவற்றை, மலையேறும் துறையில் மட்டுமல்ல, எல்லாத் துறைகளிலும், இந்தியாவுக்குப் பெற்றளிப்பதற்கான முன்னோடியாகத் திகழவேண்டும் என்பதே நம்முடைய ஆசை.

அந்த ஆசை தவறாமல் நிறைவேறும் என்பதை எழில்பட எடுத்துக்காட்டும் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்கிறது, இன்றைய குழுவினர் பெற்றுள்ள இமாலய வெற்றி.

# அதுவரையில் சரிதான் !
# ஆனால்
# அதுமட்டும் போதாது!

தமிழகத்தில் இதுவரை கல்வித் துறை நெறியாளர் ஒருவர் மட்டுமே இருந்துவந்திருக்கிறார். அல்லவா? இந்த ஏற்பாடு இப்போது மாற்றப்பட்டு விட்டது. இனி, தமிழகத்திற்குக் கல்வித் துறை நெறியாளர்கள் இருவர் இருப்பர் என்று தமிழ்நாட்டு அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

புதிய ஏற்பாட்டின்படி, பொதுக் கல்வி நெறியாளர் அலுவலகம், இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படும். ஒரு பிரிவு, உயர்நிலைக் கல்வி நெறியாளர் பிரிவு என்று அழைக்கப்படும். மற்றொரு பிரிவு, நடுத்தரக் கல்வி நெறியாளர் பிரிவு என்று அழைக்கப்படும். ஒவ்வொரு பிரிவின் தலைவராகவும் ஒவ்வொரு நெறியாளர் விளங்குவார்.

உயர்நிலைக் கல்வி நெறியாளர், கல்லூரிக் கல்வி பற்றிய அரசாங்கப் பொறுப்புகள் யாவற்றையும் பார்த்துக் கொள்வார். நடுத்தரக் கல்வி நெறியாளர், செகண்டரி கல்வி என்று அழைக்கப்படும் நடுத்தரக் கல்வி, தொடக்கக் கல்வி ஆகிய இரு நிலைக்கல்விப் பொறுப்புகளையும் கவனித்துக்கொள்வார். பாடநூல்களை முடிவு செய்யும் பொறுப்பும் இவருக்கே உண்டு.

தற்போது கல்வித்துறை நெறியாளரே பொது நூலகங்களின் நெறியாளராகவும் இருந்து வருகிறார் அல்லவா? இந்தப் பொறுப்பு, இனி, உயர் கல்வி நெறியாளரிடம் இருக்கும்.

இந்தப் புதிய ஏற்பாடுகள் யாவற்றையும் நாம் மனமார வரவேற்கிறோம். இத்தகைய திட்டவட்டமான மாறுதலை தெள்ளத் தெளிவான முறையில் உருவாக்கி, நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ள தமிழ்த் திரு நாட்டு ஆட்சியாளர்களைப் பெரிதும் பாராட்ட விழைகிறோம்.

சென்ற பதினைந்து ஆண்டுகளில் தமிழகத்துக் கல்வித் துறையானது, பெருமையும் மகிழ்ச்சியும் அளிக்கததக்க முறையில் மடமடவென வளர்ந்து, செழித்துக், கிளைத்து ஓங்கி உயர்ந்து நிற்கிறது தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகிய பூவகைக் கல்வி நிலையங்களின் எண்ணிக்கைகளும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பெருகிவந்துள்ளன. குறிப்பாகவும் சிறப்பாகவும், தொடக்கப்பள்ளிகள்—உயர்நிலைப் பள்ளிகள்

ஆகியவற்றின் வளர்ச்சி வீதம் திகைப்பையும் வியப்பையும் அளிக்கத் தக்கதாக இருந்துள்ளது.

கல்வித் துறை வளர்ச்சியானது இத்துணை விரிவாகவும் விரைவாகவும் இருந்துவந்துள்ள காரணத்தால், தமிழக ஆட்சியால் கல்விக்காகச்செலவிடப்படும், மொத்தத் தொகையின் அளவு மும் மடங்குக்கு மேல் உயர்ந்துள்ளது. 1957—58ஆம் ஆண்டில் 11 கோடி ரூபாயாக இருந்த அந்தத் தொகை, 1965–66ஆம் ஆண்டில் ஏறத்தாழ 35 கோடி ரூபாயாக விரிந்து பரந்து நிற்கிறது. 1966 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து தொடங்கும் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், தமிழகக் கல்விப் பணியின் ஆழமும் அகலமும் மேலும் பல மடங்கு விரிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்படியெல்லாம் ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்தபடியிருக்கிற கல்விப் பணிகள் பற்றிய பொறுப்பு முழுவதையும் நெறியாளர் ஒருவரே முன்நின்று கவனித்துக் கொள்வது என்பது, இயலாத செயல். இந்தப் பணிகள் யாவற்றையும் ஒரு நெறியாளர் மட்டுமே பார்த்துக் கொள்வது என்கிற நிலை இருக்குமானால்—அவர் எவ்வளவுதான் அறிவும் ஆற்றலும் திறமையும் தகுதியும் படைத்தவராக இருந்த போதிலும்—இந்தப் பணிகள் ஒவ்வொன்றின் மீதும் தேவையான அளவு கவனத்தை அவரால் செலுத்தமுடியாது. அப்படிச் செலுத்த முடியாத காரணத்தால், பல பணிகள், தேவையான அளவிலோ, தேவையான முறையிலோ, தேவையான சமயத்திலோ, நடத்தப்பட முடியாமல் தேங்கி நிற்கிற நிலை ஏற்பட்டுவிடும்.

இந்த மறக்கமுடியாத உண்மையை மறக்கமுடியாத வகையில் நாம் உணர்ந்திருப்பதால்தான், இரண்டு நெறியாளர்கள் பணியாற்றுவது என்கிற புதிய ஏற்பாட்டை நாம் மனமார வரவேற்கிறோம்.

புதிய ஏற்பாடு, அது செய்யப்பட்டுள்ள வகையில், சரியானது தான்; ஆனால் போதுமானது அல்ல.

நெறியாளர் ஒருவர் மட்டுமே இருந்து எல்லாப் பணிகளையும் ஏற்றம்மிக்க முறையில் நிறைவேற்ற முடியாது என்பது உண்மை தான். ஆனால் இரண்டு நெறியாளர்களை அமைப்பதால் மட்டும், நிலைமை, முற்றிலும் திருந்திவிடுமா என்றால், திருந்தாது என்பதை நாம் சொல்லித்தானாகவேண்டும்.

தமிழ் நாட்டுக் கல்வித் துறை, திட்பமும் நுட்பமும் தெளிவும் திறமும் மிகுந்த முறையில் அமையவேண்டுமானால், கல்வி நெறியாளர், ஒருவர் அல்ல, இருவர் அல்ல, மூவர் இருந்தாகவேண்டும்.

தமிழகத்திலும் சரி, இந்தியாவின் பிற மாநிலங்களிலும் சரி, உலகத்தின் ஏனைய நாடுகளிலும் சரி, பொதுக் கல்வியானது இயல்பாகவே மூன்று பகுதிகளைக் கொண்டதாக அமைந்துள்ளது.

தொடக்கக் கல்வி

நடுத்தரக் கல்வி

கல்லூரிக் கல்வி

என்று அமைந்துள்ள இந்த மூன்று பகுதிகளும், இயல்பாகவே, ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பு கொண்டவை. ஒரு நாட்டின் கல்வித்துறையை எழிலும் ஏற்றமும் பொருந்திய மாளிகைக்கு ஒப்பிடுவோமானால், அம் மாளிகையின் கடைக்கால் போன்றது, தொடக்கக் கல்வி. அதன் சுவர்கள் போன்றது, நடுத்தரக் கல்வி. மேல் தளம் அல்லது கூரையைப் போன்றது கல்லூரிக் கல்வி.

கடைக்கால், சுவர், தளம்—இம் மூன்றில் எது ஒன்று இல்லாவிட்டாலும் மாளிகை அமையமுடியாது என்பது எளிதில் தெரிகிற உண்மை. அதுபோலத்தான், தொடக்கக் கல்வி, நடுத்தரக் கல்வி, கல்லூரிக் கல்வி—இம் மூன்றில் எது ஒன்று இல்லாவிட்டாலும், கல்வித்துறை முழுமை அடைய முடியாது.

இம் மூவகைக் கல்வி நிலைகளும் இவ்வளவு நெருங்கிய பந்தமும் பாசமும் இணைப்பும் பிணைப்பும் உடையவையாக இருந்தபோதிலும், இவை ஒவ்வொன்றின் அமைப்பும் இயல்பும் தன்மையும் சூழ்நிலையும் தேவைகளும் சிக்கல்களும் வெவ்வேறு வகையானவை. அச் சிக்கல்களைத் தீர்த்து, தெளிவை உருவாக்கி, நிலைமையை ஒழுங்குபடுத்துவதற்குரிய பரிகாரங்களும் வெவ்வேறு வகையானவையே.

நிலைமை இதுவாக இருக்கிற காரணத்தால்தான்,

ஆரம்பக் கல்வியை மட்டும் கவனிக்க ஒரு நெறியாளர்,

நடுத்தரக் கல்வியை மட்டும் கவனிக்க வேறொரு நெறியாளர்,

கல்லூரிக் கல்வியை மட்டும் கவனிக்க இன்னொரு நெறியாளர்

ஆக மூன்று நெறியாளர்கள் இருந்தாக வேண்டும் என்பது நம்முடைய அழுத்தந் திருத்தமான கருத்து.

இந்தக் கருத்தை நம் “ஆரம்பக் கல்வி” இதழின் தலையங்கங்கள்—துணைத் தலையங்கங்கள் வாயிலாக நாம் பலமுறை வற்புறுத்திக் கூறிவந்துள்ளோம்.

இதே கருத்தை, கல்வி உலகத்தில் நீண்டகால அனுபவம் படைத்துள்ள கல்வித் துறை வல்லுநர்கள் பலரும் கொண்டுள்ளனர்.

சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் இக் கருத்தைத் தமிழகச் சட்டமன்றக் கூட்டங்களில் எடுத்துக்காட்டி வற்புறுத்தியுள்ளார்கள்.

பல திசைகளிலிருந்தும் பொங்கியெழுந்த இந்தக் கருத்து அலைகளின் விளைவாக, ஆட்சியாளர்கள், இப்போது இரண்டு நெறியாளர்கள் என்கிற ஏற்பாட்டை உருவாக்கியுள்ளார்கள்.

ஒரு நெறியாளருக்குப் பதிலாக இனி இரண்டு நெறியாளர்கள் இருப்பர் என்கிற அளவில், இந்த ஏற்பாடு, வரவேற்கத்தக்கதுதான். ஐயம் இல்லை துளியும். ஆனால் இரண்டு நெறியாளருக்கு மாறாக மூன்று நெறியாளர்கள் இருப்பர் என்று ஆட்சியாளர்கள் ஏற்பாடு செய்திருந்தால், செய்யப்பட்ட சீர்திருத்தம் முழுமை உடையதாக இருந்திருக்கும். ஏற்படக்கூடிய முன்னேற்றமும் பெரிய அளவினதாக இருந்திருக்கும்.

ஒரே நெறியாளர், நடுத்தரக் கல்வி, தொடக்கக் கல்வி—இரண்டையும் கவனித்துக் கொள்வது என்பது, அரசாங்கம் இப்போது செய்துள்ள ஏற்பாடு.

இந்த இரு நிலைக் கல்வித் துறைகளைக் கவனித்துக்கொள்ள இரு வேறு நெறியாளர்கள் இருப்பது நல்லது என்பது நாம் தெரிவிக்கிற கருத்து.

உடனே முடியாவிட்டாலும், சில மாதங்களுக்குப் பின்னராவது, இந்த மாறுதலையும் ஆட்சியாளர்கள் செய்துவிடவேண்டும் என்பது நம்முடைய பணிவான வேண்டுகோள்.

அரசாங்கத்தார் செய்துள்ள சீர்திருத்தத்தை வரவேற்கிற அதே நேரத்தில், அவர்கள் இனிச் செய்ய வேண்டிய சீர்திருத்தத்தையும் சுட்டிக் காட்டவேண்டியது, நம்முடைய ஜனநாயகக் கடமை அல்லவா?

ஒருவர், இருவர் ஆயினர். நன்று. மிக நன்று.

இருவர், மூவர் ஆதல் வேண்டும். அது என்று?

———

# சொன்னோம் அப்போது!
# சொல்கிறார்கள் இப்போது!

தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு கல்விக் குழுக்கள் அமைக்கப்படவேண்டும். ஒன்றை, தொடக்கக் கல்விக் குழு (Elementary Education Council) என்றும், மற்றொன்றை, நடுத்தரக் கல்விக் குழு (Secondary Education Council) என்றும் அழைக்கலாம்.

இந்தக் கல்விக் குழு ஒவ்வொன்றிலும், அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களின் பிரதிநிதிகள், தனியார் பள்ளி நிர்வாகிகளின் பிரதிநிதிகள், ஊராட்சி—நகராட்சி மன்றப் பிரதிநிதிகள், சட்ட மன்ற—பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கல்வி அதிகாரி, மாவட்டத்தில் உள்ள தலைசிறந்த கல்வி வல்லுநர்கள் ஆகியோர் இடம் பெறவேண்டும்.

தொடக்கக் கல்வியைப் பற்றிய பிரச்சினை எதுவாக இருந்தாலும்—தொடக்கக் கல்வியில் செய்யப்படவிருக்கிற சீர்திருத்தம் எதுவாக இருந்தாலும், அவை யாவும், நடைமுறைக்கு வருவதற்கு முன்னர், மாவட்டத் தொடக்கக் கல்விக் குழுக்களின் பார்வைக்கும் ஆய்வுக்கும் வைக்கப்படவேண்டும். அந்தப் பிரச்சினைகளை அல்லது சீர்திருத்தங்களை அந்தக் குழுக்கள் விரிவான முறையில் பரிசீலித்துத் தங்கள் கருத்துரைகளைத் தருமாறு கேட்கப்படவேண்டும். அந்தக் கருத்துரைகள் யாவும் கிடைத்தபிறகு, அவற்றையெல்லாம் ஆய்ந்து பார்த்து, அதன் பின்னரே ஆட்சியாளர்கள் அவைபற்றிய ஒரு முடிவை எடுக்கவேண்டும்.

இதுபோலவே, நடுத்தரக் கல்வியைப் பற்றிய எந்தப் பிரச்சினையும் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள நடுத்தரக் கல்விக் குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டு, அக்குழுக்களின் கருத்தோட்டங்களைக் கண்டறிந்த பிறகே முடிவு செய்யப்படவேண்டும்.

இவை, "ஆரம்பக் கல்வி" இதழானது நீண்ட காலமாக வற்புறுத்தி வரும் கருத்துகளாகும்.

ஏறத்தாழ இத்தகைய ஒரு நடைமுறைதான் பிரிட்டன் அமெரிக்கா, பிரான்ஸ் முதலிய மேலை நாடுகளில் இருந்து வருகிறது.

மேலை நாடுகளில் மட்டுமல்ல, நம் தமிழ் நாட்டிலும் கிட்டத்தட்ட இதுபோன்ற ஒரு முறைதான் 1938ஆம் ஆண்டுவரை இருந்து வந்தது.

கல்விக் குழுக்கள் தமிழகத்தில் செம்மையான முறையிலும் சிறப்பான வகையிலும் பணியாற்றிக் கொண்டிருந்த வரையில்—அதாவது 1938ஆம் ஆண்டு வரையில், தமிழகத்தின் கல்வித் துறையில் குறிப்பிடத்தக்க குழப்பம் எதுவும் இல்லாமலிருந்தது.

ஏனோ தெரியவில்லை—1938ஆம் ஆண்டில் அக் குழுக்கள் கலைக்கப்பட்டுவிட்டன.

கல்விக் குழுக்கள் அவ்வாறு கலைக்கப்பட்ட பிறகு, தமிழ் நாட்டின் நடுத்தரக் கல்வியிலும் தொடக்கக் கல்வியிலும் ஏற்பட்டுள்ள திடீர் மாறுதல்களும் சீர்கேடுகளும் குழப்ப நிலைகளும் கோணல் போக்குகளும் பற்பல என்பதை நாம் எடுத்துக்காட்டாமல் இருக்க முடியாது. இப்படியெல்லாம் குழப்ப நிலைகளும் கோளாறுகளும் உருவானதற்குரிய தலைசிறந்த காரணம், எந்தெந்த நேரத்தில் யார் யார் கல்வி அமைச்சராகப் பதவி வகித்தனரோ அவர்களுடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கும் எண்ணப்போக்குகளுக்கும் ஏற்றபடியெல்லாம் மாறுதல் செய்யப்பட்டதுதான் ஆகும்.

கல்வித் துறையில் செய்யப்படுகிற எந்த மாறுதலும், கல்வித் துறையில் ஈடுபட்டு ஆழ்ந்த அனுபவம் பெற்றுள்ள ஆசிரியர்கள்—நிர்வாகிகள்—வல்லுநர்கள் ஆகியோரின் விரிவான பரிசீலனைக்கும் தெளிவான ஒப்புதலுக்கும் பிறகு கொண்டுவரப்பட்டால்தான், அந்த மாறுதலால் தகுந்த பலன் விளையமுடியும். அவ்வாறின்றி, குறிப்பிட்ட ஒரு சமயத்தில், அரசியல் காரணங்களால் கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள ஒருவர், அவருக்கு நல்லது என்று தோன்றுகிற ஒரே காரணத்தால், சில பல மாறுதல்களைக் கொண்டுவருவாரானால், அம் மாறுதல்களால், நாட்டுக்கோ அல்லது கல்வி உலகத்திற்கோ எவ்வாறு நன்மை விளைய முடியும்?

நன்மை விளைய முடியாது என்பது மட்டுமல்ல, எல்லையற்ற தீமையும் ஏற்படும் என்னும் உண்மையை, தமிழ்நாட்டுக் கல்வி உலகத்தின் சென்ற இருபதாண்டுக் கால வரலாறு, தெள்ளத் தெளிவாக விளக்கிக்காட்டுகிறது.

எட்டு ஆண்டுகளைக் கொண்டதாக இருந்த ஆரம்பக் கல்வி ஏழு ஆண்டுகளைக் கொண்டதாகக் குறைக்கப்பட்டதும், சிறிது காலத்துக்குப் பிறகு மீண்டும் அது எட்டு ஆண்டுகளாக உயர்த்தப்பட்டதும், தனியார் பள்ளி நிர்வாகிகளுக்குத் தகுந்த இழப்பீடு தரப்படும் என்று முதலில் தெரிவிக்கப்பட்டதும், நியாயமாகத் தேவைப்படுகிற அளவில் கால் கூறுகூட இல்லாத ஒரு தொகையே பின்னர் தரப்பட்டதும், அரசாங்க உதவித் தொகை தேவையில்லை என்று கருதுகிற தனியார் தொடக்கப் பள்ளிகள் மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலித்துக் கொள்வதில் ஆட்சேபம் இல்லை என்று அரசாங்கம் அறிவித்ததும், அத்தகைய ஏற்பாடு கூடவே கூடாது என்று இப்போது அறிவிப்பதும், தமிழகக் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள ஏராளமான குழப்பங்களுக்குச் சில எடுத்துக்காட்டுகள் ஆகும்.

கல்வித் துறையில் நீண்ட அனுபவம் படைத்தவர்களின் ஆய்வுரைகளைக் கேளாமலும், ஆற அமர இருந்து அலசி ஆராய்ந்து பாராமலும், அவசரக் கோலம் அள்ளித் தெளித்ததுபோல, திடீர் திடீரென்று மாறுதல்களைக் கொண்டுவந்ததால்தான், இந்தக் குழப்பங்கள் யாவும் உருவாயின.

இத்தகைய குழப்பங்களும் கோளாறுகளும் உருவாகாமல், ஒழுங்கும் தெளிவும் நிரம்பிய முறையில் கல்வி உலகம் பணியாற்ற வேண்டுமானால், மாவட்டந்தோறும் கல்விக் குழுக்கள் இருக்க வேண்டியது இன்றியமையாதது ஆகும்.

தெள்ளத் தெளிவாகத் தெரிகிற இந்த உண்மையை அழுத்தந் திருத்தமாக உணர்ந்திருக்கிற காரணத்தால்தான், நம் ''ஆரம்பக் கல்வி'' இதழானது, ஏறத்தாழ இருபது ஆண்டுகளாக, மீண்டும் கல்விக் குழுக்கள் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதை மறுபடியும் மறுபடியும் வற்புறுத்திக்கூறி வந்திருக்கிறது.

இந்தக் கருத்தை ''ஆரம்பக் கல்வி'' இதழ்மட்டும் தன்னந் தனியாக நின்று தனிக் குரலாக எழுப்பிவரவில்லை.

ஆசிரியர்களின் மன்றங்கள்,
பள்ளிக்கூட நிர்வாகிகளின் கழகங்கள்,
ஆசிரியர்கள், நிர்வாகிகள் ஆகியோரின் மாநாடுகள்,
பல்வேறு நாளிதழ்கள்,
சட்டமன்ற உறுப்பினர்கள்,
பாராளுமன்ற உறுப்பினர்கள்,
அரசியல் தலைவர்கள்,

முதலிய பல்வேறு திறத்தினரும் நிலையினரும் இதே கருத்தைப் பலமுறை எடுத்தெடுத்துக் கூறியுள்ளனர். சிலர் இடித்து இடித்தும் கூறியுள்ளனர்.

கல்விக் குழுக்கள் தேவை என்னும் கருத்தை, ஏறத்தாழ எல்லாத் தரப்பினரும் கிட்டத்தட்ட ஏகமனதான முறையில் தெரிவித்துள்ளனர் என்று இயம்பினால் அது மிகையாகாது.

ஏகமனதான கோரிக்கைதான். என்றாலும் இந்தக் கோரிக்கையை இதுவரை நிறைவேற்றவில்லை தமிழக அரசாட்சியினர்.

மிக மிக நியாயமான கோரிக்கை—நிச்சயம் நிறைவேற்றப்பட வேண்டிய கோரிக்கை—

ஒருமுகமாக விரும்பப்படுகிற கோரிக்கை—

நீண்ட கால அனுபவத்தால் மிகச் சிறந்தது என்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கோரிக்கை—

கல்வித் துறையானது ஒழுங்கான முறையில் வளரவேண்டுமானால் கட்டாயமாக ஏற்கப்படவேண்டிய கோரிக்கை—

என்றாலும் இக் கோரிக்கையை நடைமுறை நாதமாக்கவில்லை தமிழக ஆட்சி, இன்றுவரை.

ஏன்? என்ன காரணம்? தெரியவில்லை நமக்கு! நமக்கு மட்டுந் தானா தெரியவில்லை? நாடு முழுவதற்குமே தெரியவில்லை—தெரிவிக்கப் படவில்லை அரசாங்கத்தால்.

நீண்ட பல ஆண்டுகளாக நம்மைப்போன்ற சாமான்யர்களால் எழுப்பப்பட்டு வந்த இந்த வேண்டுகோள், இப்போது, வேண்டுகோள் என்ற முறையில் அல்ல, அறிவுரை என்னும் வகையில், நம்மைப் போன்ற சாமான்யர்களால் அல்ல, மிகப் பெரிய மனிதர்களால், அளிக்கப்பட்டிருக்கிறது.

இந்திய நாட்டின் கல்விப் பிரச்சினைகள் யாவற்றையும் விரிவான முறையில் பரிசீலனை செய்து, தேவையான மாறுதல்கள் என்னென்ன என்பதைப் பரிந்துரை செய்வதற்காகச் சில மாதங்களுக்கு முன்னர், இந்திய அரசாங்கத்தால், பெயரும் புகழும் மிக்க கல்வி வல்லுநர் களைக்கொண்ட கல்விக் கமிஷன் ஒன்று நிறுவப்பட்டது அல்லவா? அந்தக் கமிஷனில் இந்த நாட்டைச் சேர்ந்த கல்வி வல்லுநர்கள் மட்டு மல்ல, மேல் நாடுகளைச் சேர்ந்த கல்வி நிபுணர்கள் பலர்கூட இடம் பெற்றுள்ளனர் அல்லவா? அத்தகைய கல்விக் கமிஷன்தான் இப் போது, கல்விக் குழுக்கள் நிறுவப்படவேண்டும் என்னும் கருத்தை வன்மையான முறையில், வற்புறுத்தியிருக்கிறது.

பல்வேறு மாநிலங்களின் கல்வித்துறைச் செயலாளர்கள், பொதுக் கல்வி நெறியாளர்கள் ஆகியோர் அடங்கிய மாநாடு ஒன்று, ஜூன் திங்கள் நான்காம் நாள் அன்று, காஷ்மீரத்தின் தலைநகராகிய ஸ்ரீநகரில் நடைபெற்றிருக்கிறது. இந்தியாவின் கல்விக் கமிஷன் அந்த மாநாட்டுக்கு முக்கியமான பல பரிந்துரைகளைத் தந்துள்ளது. ஆரம்பக் கல்வி பற்றிய பிரச்சினைகளைக் கவனித்துக்கொள்வதற்காக இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு கல்விக் குழு ஏற்படுத்தப்படவேண்டும் என்பது, அந்தப் பரிந்துரைகளில் தலையாய ஒன்று.

நம்மைப் போன்ற எளியவர்கள் எடுத்துரைத்து வந்தோம் இருபது ஆண்டுகளாக.

ஏற்றுக்கொள்ளவில்லை தமிழக அரசினர்.

இந்தியாவின் கல்விக் கமிஷனே ஆய்வுரை அளிக்கிறது இப் போது.

இப்போதாவது ஏற்றுக்கொள்வார்களா ஆட்சியாளர்கள்?

சொன்னோம் நாம், அப்போதே!

சொல்கிறார்கள் அவர்கள், இப்போது!

ஏற்பது ஆட்சியாளர்கள்—எப்போது?

---

## வேண்டுவது இதுவே!

*"இறைவா! எனையீன்ற பெருமைக்குரிய தந்தையே! இன்று உன்னைச் சிலவற்றைக் கேட்கும் பொருட்டு வந்துள்ளேன். நான் கேட்பதை நீ கேட்க வேண்டும்; கேட்டவாறு கொடுத்தருளவேண்டும்.*

*தலைவ! எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்தும் அருளை எனக்களித்தல் வேண்டும். ஏனென்றால் உயிர்களிடத்தில் பாசம் காட்டும் பக்குவம் யான் பெறவில்லை. இரக்கமற்ற இதயத்தோடுதான் சமுதாயத்தில் உலவுகிறேன். இவ்வித இதயத்தை மாற்றியமைத்தருளல் வேண்டுகிறேன். எங்கும் எப்போதும் எவ்விடத்தும் சென்று, நின்னருட்புகழை விரித்துரைக்கும் வழியை உருவாக்கித் தருதல் வேண்டும்; நானிலத்திலும் நல்லொழுக்கம் பரவுவதற்கு நான் உழைக்க நீ உன் அருளொளியைக் காட்டவேண்டும்; தவறாக நான் நடந்தால் நீ பொறுத்தருளவேண்டும். மனித தேகம், பிழைபுரியக்கூடியது என்பது நானறிந்த உண்மை. ஆதலினால்தான் என்னையுமறியாமல் ஏற்படும் பிழையைப் பொறுத்தருள விழைகின்றேன். அதோடு, தலைவா! உன்னை மறவாத நிலை எனக்கு வரவேண்டும். அடிக்கடி உன்னை மறந்துவிடுகிறேன். அதனாலேயே சமுதாயத்தில் பல பிழைகளைப் புரிகிறேன். உன்னை மறக்காமல் இருக்கும் உறுதிப்பாடு என்னிடம் வருமேயானால் பிழை புரிவதற்கு மார்க்கமே இல்லை. வேண்டுவதும் இதுவே!"*

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாநா னன்புசெயல் வேண்டும்
எப்பாரு மெப்பதமு மெங்கணுநான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேற் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினு நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.

விளக்கம்: **வே. கபிலன்** —திருவருட்பா

# இராமலிங்க அடிகள்

## பி. ஸ்ரீ

‘சிந்தனை வளர்ந்தது வடக்கே; கலை பெருகியது தெற்கே’ என்றார் பண்டித ஜவாஹர்லால் நேரு ஒரு சமயம். வேத வேதாந்தங்கள் இந்தியாவின் சிந்தனைகளைத் தூண்டி வளர்த்தன; தத்துவ இமாலயத்தில் ஞான எவரெஸ்டுகளை எட்டிப் பிடிக்க உதவின.

பல நூற்றாண்டுகளுக்குப் பின், தென்கோடியிலுள்ள தமிழகத்தில் உபநிடதங்கள் துணிந்து ஏறிப் பிடித்திருந்த மலையேற்றங்கள் கலைச் சிகரங்களாகப் பரிணமித்தன. பனி மூடிய ஞான பூமியில் அழகுக் கதிரவனின் அன்புக் கதிர்கள் புகுந்து சத்தியத்தையும் சௌந்தரியத்தையும் இணைத்துக் காட்டின.

பண்டைத் தமிழர்களின் நாகரிகமும் பண்பாடும் காதலாலும் வீரத்தாலும் பெரிதும் உருவாக்கப் பெற்று, வடக்கேயிருந்து வந்த கொள்கைகளையும் தழுவி வளர்ந்து வந்தன. தமிழர்களிடையே வளர்ந்த ஆற்றங்கரை நாகரிகம் கடலோடி வந்த பிற நாட்டினருடன் கருத்து—வாணிபம் செய்து தன் மூலதனத்தைப் பெருக்கிக் கொண்டது. இத்தகைய சூழ்நிலையில், பல்லவர் ஆட்சியில் ஆழ்வார், நாயன்மார்கள் ஞான பக்திக்கொள்கை நம் இந்து தர்மத்திற்குப் புத்துயிர் அளிக்கலாயிற்று.

சோழப் பேரரசும், அப்பால் விஜயநகரப் பேரரசும் தருமப் பயிரையும் சமயப் பயிரையும் வாடிக் கருகவிடாமல் பாதுகாத்து வந்தன. ஆசாரியார்கள் தோன்றித் தங்கள் பேருரைகளாலும் ஒழுக்கத்தாலும் இந்து சமயத்தைக் கண்ணினைக் காக்கின்ற இமைபோல் காத்துவந்தனர்.

எத்தனையோ படையெடுப்புகள், அரசியல் குழப்பங்கள், தன்னலப் பூசல்கள், ஜாதிசமயச் சண்டைகள், எனினும் பெரியோர்கள், பேரறிஞர்கள், பெருங்கலைஞர்கள், மகாகவிகள், வாழையடி வாழையென வந்து இந்து தர்மத்தை வாழ்வித்திருக்கிறார்கள்.

கடைசியாக, ஐரோப்பிய நாகரிகமும், கடலோடி வந்து நம்முடன் கலக்கத் தொடங்கியது. அதன் பயனாகச் சீர்திருத்தப் பயணங்கள் சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின. புரட்சிகரமான சீர்திருத்த முயற்சிகளுடன் தேசிய இயக்கமும் தோன்றித் திகழலாயிற்று. இந்த இயக்கத்திற்குப் பக்தி சமாஜங்களும் பகுத்தறிவுக் கழகங்களும் ஒருங்கே துணை புரியலாயின.

## இராமமோகனரும் இராமலிங்கமும்

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (கி. பி. 1771)-ல் தோன்றிய ராஜாராம்மோகன் ராய் சமயத்துறையிலும் சமூகத் துறையிலும் கல்வித் துறையிலும் தொண்டாற்றி இந்து சமயத்தை வளர்க்க பத்தொன்பதாம் நூற்றாண்டில் அரும்பாடுபட்ட சீர் திருத்தவாதிகளில் முதல்வராவர். இவர் உபநிடதங்களையும் வேதாந்த சூத்திரங்களையும் நன்கு கற்றிருந்தார். கிறிஸ்தவ சமயக் கொள்கைகளையும் கற்றுச் சிந்தித்துத் தெளிந்திருந்தார். பிரம சமாஜத்தை நிறுவியவர் இவரே. இவர் விக்கிரக வழிபாட்டை ஒப்புக் கொள்ளவில்லை.

ராம்மோகனர் 1833ல் காலமானார். இதற்குப் பத்து ஆண்டுகளுக்கு முன் சிதம்பரத்திற்கு அருகிலுள்ள, மருதூர் என்ற கிராமத்தில் தோன்றியவர் வள்ளலார் என்ற இராமலிங்க அடிகள்.

ராம்மோகனருக்குப் பின் பிரம சமாஜத்தை வளர்த்தவர்கள் கவி ரவீந்திரநாதரின் பாட்டனரான துவாரகநாத தாகுரும் தந்தையான தேவேந்திரநாத் தாகுரும் ஆவர். அவர்களுடைய கொள்கைகளும் தமிழகத்தை எட்டி, இராமலிங்கர் காதிலும் விழுந்தன என்று கருதலாம்.

திருப்பாதிரிப்புலியூரில் பிரம சமாஜத்தைச் சார்ந்தவர்கள் விக்கிரக வழிபாட்டைக் கண்டித்துப் பேசியதை, அறிந்த இராமலிங்கர் அக்கொள்கையை மறுத்து, உள்ளம் ஒரு நிலைப்படுவதற்கு இத்தகைய வழிபாடு இன்றியமையாதது என்று வாதித்தார் என்பது இவரது வாழ்க்கை வரலாற்றுச் செய்திகளில் ஒன்று.

## இராமலிங்கரும் கேசவசந்திரரும்

கேசவசந்திரசேனர் பிரமசமாஜத்தின் ஆசாரியரானதும் அவர் பம்பாய், சென்னை முதலிய இடங்களில் கிளைக் கழகங்களை நிறுவினார்; அவர் ஜாதி ஒழிப்பை ஒரு தீவிரக் கொள்கையாக மேற்கொண்டார். அவரது கொள்கைகளும் இராமலிங்க அடிகளின் பிற்கால வாழ்க்கையை உருவாக்கியிருக்கவேண்டும் எனக் கருதலாம்.

கி. பி. 1866-ல் கேசவசந்திர சேனர் "இந்திய பிரம சமாஜம்" என்ற புதிய கழகம் ஒன்றைத் தோற்றுவித்தார் "இந்தப் பரந்த உலகம் ஆண்டவனின் திருக்கோயில், தூயஉள்ளமே மிகவும் பரிசுத்தமான கோயில்; உண்மையே நித்தியமான வேதம்; நம்பிக்கை சமய வழிபாட்டின் ஆணிவேர்; அன்பு உண்மையான ஆத்ம வித்தை; தன்னலம் துறத்தலே உண்மைத் துறவு" இது கேசவ சந்திர சேனரின் பிரமசமயசாரம்.

இத்தகைய கொள்கைகளை ஆவேசமாகக் கேசவசந்திரசேனர் பிரசாரம் செய்து வந்த காலத்தில் இராமலிங்கருக்கு வயது நாற்பத்து மூன்று. இவர் உள்ளமும் நன்கு பழுத்துச் சமரஸ சன்

மார்க்க சங்கத்தை நிறுவுவதற்கு உரிய பக்குவ நிலையில் இருந்தது.

“இரக்கமே வடிவாம் வடலூரான்” என்று இராமலிங்க அடிகள் போற்றப்பட்ட காலம் அது. ‘இரக்கம் வேறு, என் உயிர் வேறு என்பதில்லை; இரக்கம் நீங்கினால், என் உயிரும் நீங்கும்’ என்று பொருள் படப் பாடியிருக்கிறார் இராமலிங்க அடிகள். ஆண்டவனிடம் அருள் பெற வேண்டும் என்றால், நாமும் அருளைப் புலப்படுத்திய வண்ணமாக இருக்க வேண்டும். அண்டத்தை ஆட்டி வைக்கும் தெய்வத்தின் மீது அன்பு பாராட்டுவதற்கு அண்டை அயலார் மீதும் அன்பு செலுத்த வேண்டும். இது இராமலிங்கரின் தனிப் பெருங் கருணை வளர்த்து விட்டிருக்கும் சன்மார்க்க நெறியின் சாரம்.

மக்களுக்குப் புரியும்பணி கடவுளுக்குப்புரியும்பணியாகும். தாழ்ந்தவர்களை உயர்த்துவதே நம்மை உயர்த்திக்கொள்ளும் வழி. மரணத்தையும் வெல்லும் ஆற்றல் அன்பிற்கு உண்டு. இத்தகைய கொள்கைகளும் இராமலிங்கரின் சுத்த சன்மார்க்கத்தின் உயிர் நிலையாக இருந்தன. இக் கொள்கைகளுடன், மக்களிடையே சகோதர தர்மமும் மதங்களிடையே சகோதர தர்மமும் அவசியமானவை என்றார் இராமலிங்கர்.

பிரம சமாஜக் கொள்கைகளை இராமலிங்கர் அறிந்திருந்தபோதிலும், இவரது சமரச சன்மார்க்கம் தமிழகம் வளர்த்திருந்த சமயப் பெருங் கொள்கைகளின் அடிப்படையில் வேரூன்றி, இவரது மேதா விலாசத்தாலும் அனுபூதி நிலையினாலும் வளர்ந்தோங்கியதுதான்.

## பரமஹம்சரும் வள்ளலாரும்

அனுபூதி நிலையில் இராமலிங்கர் பிரம்ம சமாஜத் தலைவர்களைக் காட்டிலும் இராமகிருஷ்ண பரமஹம்சரை நினைவூட்டுகிறார் என்பது வெளிப்படை. எம்மதத்தையும் சம்மதமாக்கிக் கொள்ளும் இராமலிங்கரின் மன நிலையைக் கேசவசந்திர சேனர் போன்ற பிரம சமயிகளிடத்திலும் காண்கிறோம். ஆனால் பக்தி அனுபவங்களின் அற்புத சிகரங்களை எட்டிப் பிடித்ததில் இராமலிங்கருக்கு நிகரானவர் இராமகிருஷ்ண பரமஹம்சரே என்று துணியலாம்.

## வள்ளலாரும் தயானந்தரும்

அந்தக் காலத்தில் பார்ஸிகள் முஸ்லிம்களுக்கு இடையிலும் சீர்திருத்தக் கிளர்ச்சி ஏற்பட்டிருந்தது. ஆரிய சமாஜத்தை 1875ல் தோற்றுவித்த சுவாமி தயானந்த சரஸ்வதி இராமலிங்கர் பிறந்த மறு வருஷத்தில் பிறந்தவர் இராமலிங்கரின் மறைவுக்குப் பின் ஒன்பது ஆண்டுகள் வாழ்ந்தவர். ஆனால் 188ம் ஆண்டிலேயே தயானந்தர் தம் கொள்கைகளை ஆவேசமாய்ப் பரப்பி வந்தார். எனவே, அக்கொள்கைகளும் இராமலிங்க அடிகளின் செவியில் விழுந்திருக்கக்கூடும்.

### 'தியாஸபி'க்கு முன்னேடி

'தியாஸபி' என்ற திவ்யஞான சங்கக் கொள்கைகள் முதல் முதல் பிளவாட்ஸ்கி அம்மையாரால்உரு வாக்கப் பெற்றன. கர்னல் ஆல் காட் என்பவர் திவ்யஞான சபை ஒன்றை 1875ம் ஆண்டில் அமெரிக்காவிலே நியூயார்க் நகரில் நிறுவினர். பிளாவட்ஸ்கி அம்மையும் ஆல்காட் துரையும் 1879ல் இந்தியாவுக்கு வந்தார்கள். அவர்கள் வந்த ஐந்து ஆண்டுகளுக்குள் திவ்ய ஞான சங்கப் பல கிளைகளுடன் இந்தியாவில் வளர்ந்து இந்து சமயத்திற்கு ஒரு புதுமைப் பேரரண் ஆயிற்று.

சிறப்பாக டாக்டர் அனிபெஸன்ட் அம்மையாரின் தலைமையில் இந்தச் சங்கம் ராமலிங்கரின் சுத்த சன்மார்க்க கனவுகளுக்கு ஒரு வகைப் புத்துயிரும் புதிய உருவமும் கொடுத்தது என்று கருதுவது பொருத்தமே.

ஃ ஃ ஃ

இப்படி யெல்லாம் வரலாற்றுப் பின்னணியில் இராமலிங்க அடிகளை உற்று நோக்கும்போது, இவரது ஞான சொரூபம் ஒரு புதுமைப் பொலிவுடனும் வசீகரசக்தியுடனும் நம் அகக் கண்ணுக்கு இலக்காகி இன்றைய தமிழர்களாகிய நம்மை நெறிப்படுத்தும் என்று நம்புகிறேன். டாக்டர் அனிபெஸன்டின் மேதையால் பெரும்புகழ் பெற்றிருந்த திவ்ப ஞான சங்கமும் கலைபிழந்து நிற்கும் இந்நாளில் வள்ளலாரின் சமரச சன்மார்க்க சங்கத்தை மீண்டும் உயிர்ப்பித்தல் இன்றியமையாதது. இம் முயற்சி வெற்றி பெறுமானல், இராமலிங்க அடிகள் தாம் உரிய காலத்தில் திரும்பி வருவதாக 1874 ஜனவரி 30ம் தேதி தாம் பிரியும் நிலையில் உறுதி கூறினரே" அந்த உறுதி மொழி பலித்து விட்டதென்றே நாம் கருதிக் களிப்படையலாம்.

—தினமணி

---

சிந்தனைக்கு

1. கரும்பு எப்போதும் இனிக்கிறது; ஆனல் மனிதனே சில சமயங்களில்தான் இனிக்கிறன். —பர்மியப் பழமொழி.

2. புதிதாகப் பணம் சேர்த்தவனிடம் கடன் கேட்காதே; புதிதாகத் திருமணமானவர்களைப்போய்ப் பார்க்காதே.

—மலாய் பழமொழி.

3. வெளி இடங்களில் தங்கமும், வெள்ளியுமாக மழை பொழியலாம். நீ உள்ள இடத்தில் கத்தியும், செம்மட்டியுமாகவே கொட்டலாம். இருந்தாலும் நீ உள்ள இடமே மேல் என்பதைத் தெரிந்துகொள். —மலாய் பழமொழி.

தொகுப்பு: "தேம்ஸ்"

"பதினாறு பேறு" என்பது பதினாறு பிள்ளைகள் என்பதல்ல, வாழ்வுக்கு வேண்டிய பதினாறு செல்வங்கள் என்று பொருள்.

# 'பதினாறு பேறு'

முத்தமிழ்க் காவலர் : கி. ஆ. பெ. விசுவநாதம்

## பதினாறு பேறு

பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழுங்கள் என்று வாழ்த்துவது தமிழகத்துப் பழக்கங்களில் ஒன்று. அது பதினாறு பிள்ளைகளைப் பெறுவது என்பதல்ல, "நல் வாழ்விற்கு வேண்டிய பேறுகள் பதினாறு" என்பதையே அது குறிக்கும். அவை, மனை, மனைவி, மக்கள், மாடு, நிலம், நீர், வண்டி, வாகனம், கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், பொன், நெல், பெரியோர், புகழ் எனப் பெறும்.

## மாட்டுச் செல்வம்

கால்நடைகள் என்பது நமது நாட்டில் பெரும்பாலும் ஆடு, மாடுகளையே குறிக்கும். அதிலும் மாடு சிறந்தது. தமிழ் மொழியில் "மாடு" என்பதற்கே "செல்வம்" என்று பொருளுண்டு. இதனை "கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு மாடு அல்ல மற்றையவை" என்பதனால் நன்கறியலாம்.

## காளையும் பசுவும்

காளை மாடுகள் தோழனாக இருந்து உழைத்தும் பயிர்களை வளர்க்கின்றன. பசு மாடுகள் தாயாக இருந்து ஊட்டி மக்களை வளர்க்கின்றன. காளையும் பசுவும் கட்டிக் காத்தால், வாழையும் நெல்லும் வந்து குவியும். மனையை அழகு செய்வது மாட்டுச் செல்வம். பசு இல்லாத வீடு, காளை இல்லாத வண்டியைப்போலவே காட்சியளிக்கும்.

## கண் ஆறு

"கால் பத்து, கண் ஆறு, வால் இரண்டு, வயிறு மூன்று." என்பது ஒரு விடுகதை. என்ன இது? எண்ணிப்பார்த்தால் "ஏர்" என விளங்கும். கால் பத்து இரண்டு மாட்டிற்கும், ஒரு மனிதனுக்கும். கண் ஆறு, மூவருக்கும். வால் இரண்டு, மாட்டிற்கு மட்டும். வயிறு மூன்று மனிதனுக்கும் சேர்த்து. எப்படி இப்பொருள்? இதிலிருந்து விளங்குவது என்ன? "வாழ்விற்கு வேண்டுவது ஆணும், பெண்ணும்; உழவுக்கு வேண்டுவது மாடும் மனிதனும்" என்பதுதான்.

## தமிழர் திருநாள்

தைப்பொங்கல் பெருநாள் தமிழ் மக்களின் திருநாள். உலகெங்கும் காண முடியாத இவ்விழாவைத் தமிழகத்தில் மட்டுமே

காணலாம். "மாடுபிடி சண்டை" என்பது தமிழகத்தின் சொத்து. "நிரை கவர்தல்" என்பது மிகப் பழமையான வழக்கம். "மாடுகளைக்கொண்டு பிடிக்கப்போதல்" என்பது மன்னர்களின் போர் முறைகளில் ஒன்று. கன்னிப் பெண்கள் "காளைகளை அடக்கு பவனையே கணவனாக வரிப்பேன்" எனக் காத்திருப்பதும் உண்டு.

## உழவன் திருநாள்

பொங்கல் திருநாள் ஒரு வெற்றித் திருநாள். உழவன் தன் உழைப்பின் பயனைப் பெற்று மகிழும் திருநாள். புதிதாக விளைந்த நெல் அரிசியாகும். புதிதாக விளைந்த கரும்பு சர்க்கரையாகும் புதிதாக இல்லறத்திற் புகுந்த மணமக்கள், புதிதாகப் பிறக்கும் திருவள்ளுவர் ஆண்டின் புதிய முதல்நாளிலே புத்தாடை உடுத்தி, புதுவளை அணிந்து, புதுப்பூச் சூடி, புதிய அடுப்பில் புதுப் பானை வைத்து, புதிய அரிசியையும், புதிய சர்க்கரையையும் போட்டுப் பொங்கி, பசுமாடு தந்த பாலையும், நெய்யையும் பக்குவமாகக்கலந்து, இறைவனை வணங்கி, ஏழைகளுக்கு வழங்கி, உறவினர்களை உண்பித்து, தாமும் உண்டு மகிழ்வார்கள். இது முதல் நாள்.

## மாட்டுத் திருநாள்

இப்பொருள்கள் அனைத்தும் விளைந்து வீட்டிற்கு வர மனிதன் மட்டுமா உழைத்தான். மாடும் உழைத்தது. ஆகவே, அடுத்த நாள் அதையும் குளிப்பாட்டி, கொம்புக்கு வண்ணம பூசி, சல்லி கட்டி அலங்கரித்து, புதுப்பித்து பட்டியில் புதுக்கயிறுகொண்டு கட்டி, அதற்கென்று ஒரு பொங்கல் பொங்கி, ஆணும், பெண்ணும் இரு கைகளாலும் அதை அள்ளி, அள்ளி ஊட்டி அவைகளை மகிழ்விப்பர். இது இரண்டாம் நாள்.

## போட்டித் திருநாள்

நெல்லும் கரும்பும் விளைந்து வீட்டிற்கு வந்தது தன்னுடைய உழைப்பினால் என மனிதன் எண்ணினான். மாடு தன் தலையை ஆட்டி மறுத்து தன்னுடைய உழைப்பினால்தான் என்று தெரிவித்ததாம். மாட்டிற்கு அதிகவலிமையா மனிதனுக்கா? என்ற ஐயம் தோன்றியது. இருவரும் "கோதா" வில் இறங்கினர். இருவரும் தமது ஆற்றலைக்காட்டி ஒருவரை ஒருவர் அடக்கப் போராடினர். இக் காட்சியைப் பெண்டிரும், பிள்ளைகளும் கண்டு பெருமகிழ்வு கொண்டனர். இரண்டாயிரம் ஆண்டுகளாக இப்போராட்டம் நடைபெற்று வந்தும் வெற்றி தோல்வி காணமுடியவில்லை. மனிதர்களை அடக்கிய மாடுகளும், மாடுகளை அடக்கிய மனிதர்களும் இருந்துகொண்டுதான் இருக்கின்றனர். வெற்றி தோல்வி காண முடியாவிட்டாலும், உண்மையைக் காண முடிந்துவிட்டது. அது "உழவுத் தொழிலுக்கு மாடும் தேவை; மனிதனும் தேவை" என்பதே.

## உயர்ந்த செல்வம்

காளை உழைத்து மக்களை வாழ்விக்கிறது; பசு பாலூட்டி மக்

களை வளர்க்கிறது என்பன மட்டுமல்ல; அவை இரண்டும் உண்ணும் உணவையும், குடிக்கும் கழுநீரையும் சாணமாகவும், நீராகவும் திருப்பிக் கொடுத்து, உயர்ந்த எருவாக்கி, பயிர்களை விளைவித்து, உணவு உற்பத்திக்குப் பெரும் துணையும் செய்து வருகின்றன. இந்த எரு உலகின் உயர்ந்த எருக்களோடு வைத்து எண்ணப்பட வேண்டிய ஒன்று. மாட்டு எருவிலும் ஆட்டு எரு இன்னும் சிறந்ததாகும். இவை இக் கால்நடைகள் தரும் உயர்ந்த செல்வங்களாகும்.

## உயர்ந்த செல்வங்கள்

பதினாறு செல்வங்களில் தலையாய செல்வங்கள் இரண்டு. அவை மக்கள் செல்வமும் மாட்டுச் செல்வமும் என்பர் அறிஞர். மக்களுக்கும், மாக்களுக்கும் கால் வேற்றுமை ஒன்றுதான். எழுத்திலும், கால் வேற்றுமை (ா) உருவிலும் கால் வேற்றுமை (2-4). இதிலிருந்து மக்களை வளர்ப்பது போல மாக்களை வளர்க்க வேண்டும் எனத் தெரிகிறது. மாக்களை மக்களாக மட்டுமல்ல, பசுக்களைத் தெய்வமாக வணங்கி வருகிற வழக்கமும் நமது நாட்டில் உண்டு.

## செல்வத்தின் அழிவு

இத்தகைய உயர்ந்த செல்வம் நமது நாட்டில் நமது மாநிலத்தில் இன்று அழிந்து கொண்டே வருகிறது. மக்கட் செல்வம் பெருகியும், மாட்டுச் செல்வம் குறுகியும் வருகிறது. திருச்சி மாவட்டத்தில் இன்று இருப்பதெல்லாம் ஆடு 17 இலட்சமும், மாடு 17 இலட்சமும்தான். இது முன்பிருந்ததைவிட ஏறத்தாழ 12 விழுக்காடு குறைவானதாகும். இக்குறைவை நிறைவு செய்தாக வேண்டும். இன்றேல் இச்செல்வம் பெரும் அளவில் அழிந்து விடும்.

## அழிவின் காரணம்

(1) இறைச்சி ஏற்றுமதி (2) தோல் ஏற்றுமதி (3) நோய்கள் (4) கவனக்குறைவு (5) இளம் பசுக் கொலை ஆகிய ஐந்துமே யாம். இவற்றில் முன்னது இரண்டும் அரசாங்கத்தினாலும், பின்னது இரண்டும் பொதுமக்களாலும் கவனிக்கப்படவேண்டியவை.

[வெளிநாட்டு டாலர்களை இந்தியா எதிர்பார்க்கவேண்டிய நிலையில் இருப்பதால், இறைச்சி ஏற்றுமதியும், தோல் ஏற்றுமதியும் அடியோடு நிறுத்திவிட முடியாது. எனினும் உள்நாட்டு உணவுப் பெருக்கத்தையும், பால் பெருக்கத்தையும் எதிர்பார்த்து இதை ஓரளவு கட்டுப்படுத்தலாமா? என்பதை அரசாங்கம் ஆராய வேண்டும் என்பது எனது விருப்பம்.

மூன்றாவதாக உள்ள நோய் போக்குவதற்குரிய எல்லாவிதமான ஏற்பாடுகளையும் அரசாங்கம் கால்நடை மருத்துவ நிலையத்தின் மூலமும் சிறந்த மருத்துவர்கள் மூலமும் செய்து வருகிறது. நான்காவதாக உள்ளதை பொதுமக்கள் இரக்க சிந்தனை கொண்டு அவற்றை நாள்தோறும் குளிப்பாட்டி, நல்ல கட்டுத்துறை

களில் கட்டிவைத்து வயிருரத் தீனி கொடுத்து நன்முறையில் வளர்ப்பதால் போக்கலாம்.

ஐந்தாவது இளம்பசுக் கொலை உடனே நிறுத்த வேண்டிய ஒன்று. பசு வளர்ப்பவர்கள் பால் கறவை நின்றதும் உடனே விற்றுவிடுகிருர்கள். அதன் இறைச்சி மிகவும் மெதுவாக இருக்கும் என்பதற்காக அதை அதிக விலை கொடுத்து வாங்கிக் கொன்றுவிடுகிருர்கள். ஒரு இளம் பசு கொல்லப்படுவதால் பால் பெருக்கமும், பத்து இனப் பெருக்கமும் அழிகிறது; கால் நடைகள் அற்றுப்போவதற்கும் பால் பஞ்சத்திற்கும் இதுவே காரணம். ஆகவே, அவைகளின் கறவை நின்ற பிறகும் விற்காமல் வளர்த்துக் காப்பாற்றியாக வேண்டும்.

### மக்கள் வாழ்விற்கு

மக்களின் வாழ்விற்கு ஆடு, மாடுகள் மட்டுமல்ல, யானை, குதிரை, கழுதை, வாத்து, கோழி, கோவேறு கழுதை, நாய் முதலியனவும் துணைசெய்துவருகின்றன. ஆகவே அவ் உயிர்களிடத்து அன்பு செலுத்துவதும், அவை செய்யும் தொண்டுகளுக்கு நன்றி செலுத்துவதும் நமது கடமைகளாகும்.

—மதுரை எழுத்தாளர் மன்ற ஆண்டு விழா மலர்.


உருவாகி விட்டது !

விற்பனைக்குத் தயார் !!

RECORD SHEET IN TAMIL

# மாணவர் குறிப்பேடு

100 காப்பிகளுக்குரிய விலை (தபால் சார்ஜ் உட்பட) ரூ. 4

(மாதிரிக்கு கடிதம் எழுதவும்)

விவரங்கட்கு :

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹெளஸ்

("ஆரம்பக்கல்வி" ஆபீஸ்)

94-95, புதுத்தெரு, மண்ணடி சென்னை—1

## சட்டைப் பையில் அடங்கும் குட்டி அடுப்பு

புதுடில்லியில் ஒரு ஆளுக்கு தேநீர் போடுவதற்கு வேண்டிய தண்ணீர்காய்ச்சக்கூடிய கைக்கு அடக்கமான கச்சிதமான சாதனம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. கோட்பையில் வைத்து எடுத்துக் கொண்டு போகும் அளவுக்கு அவ்வளவு சிறியதாம்.

"ஹெக்காமைன்" வில்லைகளைக் கொண்டு இதை எரிய விடலாம். இந்தச் சாதனம் 8 ஹெக்காமைன் (எரி பொருள்கள்) வில்லைகள் ஆகியவற்றின் மொத்த எடை 400 கிராம்தான்.

ஒரு வில்லை 10லிருந்து 12-நிமிஷ நேரம் எரியுமாம். 40 மைல் வேகத்தில் காற்றடித்தால், அப்போதும் இந்தச் சாதனம் திருப்தி கரமாக வேலை செய்கிறதாம்.

*　　*　　*

## ரூ. 2லட்சம் பெறுமான சதுரங்கப் பலகை

நியூயார்க். மே 27-பொன்னாலும் தந்தத்தாலும் இழைக்கப்பட்ட உலகின் அரிய சதுரங்கப் பலகையொன்று விற்பனைக்கு வந்திருக்கிறது. அதன் விலை சுமார் ரூ. 2·58 இலட்சமாகும்.

கலை வேலைப்பாடுள்ள அது அரும்பொருட் சேகரிப்பாளரின் கனவாகவிளங்குகிறது. அது 1840 ஆம் ஆண்டு மூனிக்கில் செதுக்கப்பட்டது. மிகச் சிறந்த கலை வேலைப்பாடுள்ளதாக அது இருந்ததால், ஜெர்மனியைச் சேர்ந்த பவேரியாவின் இரண்டாம் லட்விக மன்னரது அரிய குடும்பச் சொத்தாகப் பேணப்பட்டது.

# அதிசயம் ஆனால் உண்மை!!

மூன்று முதல் ஆறங்குல உயரமுள்ள 32 காய்கள் அதிலுள்ளன. அவை பொன்னால் அழகுபடுத்தப்பட்டுள்ளன.

இது விளையாடுவதற் கென்று செய்யப்பட்டதல்ல. உண்மையில் அது அரிய காட்சிப் பொருளாகும் என்று அதன் உரிமையாளரான ஸ்ரீமதி ஃபிளாபட்டு எல். ஹார்ப்பர் என்பவர் கூறினார்.

செபமரப்பெட்டியூல் அடக்கப்பட்டுள்ள அதைத் தனித்தனியாக எடுத்துவிடலாம். அதன் 32 காய்களும் 500 தனித் தனிப்பாகங்களாகும்.

*　　*　　*

## கருவிலுள்ள சிசுவுக்கு இரத்தம் செலுத்தினார்கள்

பம்பாய் மே. 24—கருவிலுள்ள சிசுவுக்கு இரத்தம் செலுத்தும் அரிய சாதனை சமீபத்தில் பம்பாயில் நிகழ்ந்தது.

32 வார கருவிலுள்ள ஒரு குழந்தைக்கு ரத்தம் செலுத்தப்பட்டது. கருவுக்குள் அது வளர்ச்சி பெறுவதற்காக இவ்வாறு இரத்தம் செலுத்தப்பட்டது. பின்னர் 6 வாரங்கள் கழித்து ஆப்பரேஷன் செய்து குழந்தையை வெளியில் எடுத்த போது அந்தக் குழந்தை மஞ்சள் காமாலையால் பீடிக்கப்பட்டிருப்பதைக் கண்டு மீண்டும் இரண்டு தடவை

புதிய இரத்தம் செலுத்தப்பட்டது

இந்தியாவிலேயே இதுவரை எந்த இடத்திலும் நடந்திராத அரிய வைத்திய சாதனையாகும் இது

பம்பாயில் பிரபல ஆஸ்பத்திரிகளான செண்ட் ஜார்ஜ் ஆஸ்பத்திரி மத்திய ரயில்வே ஆஸ்பத்திரி இ. எம். ஆஸ்பத்திரி ஆகியவற்றைச் சேர்ந்த டாக்டர்கள், ஒத்துழைத்து 3 ஸ்தாபனங்களின் வசதிகளைப்பயன்படுத்திக் கொண்டு இந்த அபார சாதனையைப் புரிந்துள்ளனர்.

இந்தக் குழந்தையின் தாயாருக்கு இதற்கு முன்னால் 6 குழந்தைகள் பிறந்து அத்தனையும் மரித்து விட்டனவாம். இரத்தம் ஒத்துக்கொள்ளாததே இதற்குக் காரணமாம்

இந்தக் குழந்தைக்குத் தேவைப்பட்ட இரத்தம். சாதாரணமாக கிடைக்கக் கூடிய பிரிவு எதையும் சேர்ந்தது அல்ல. அரிதான பிரிவைச் சேர்ந்தது. இந்த ரத்தத்தை செண்ட் ஜார்ஜ் ஆஸ்பத்திரி கொடுத்துதவியது.

தற்போது இந்தக் குழந்தை சௌக்கியமாக வளர்ந்து வருகிறது.

* * *

## துறைமுகம் தோண்ட அணுகுண்டு

ஆஸ்திரேலியாவின் மேற்குக் கரையில் ஒரு துறைமுகம் தோண்ட அணுகுண்டு வெடிப்புகளைப் பயன் படுத்துவதற்காகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இப்பரிசோதனை வெற்றி பெற்றால் இரண்டாவது பனமா கால்வாயைத் தோண்ட அதே போல சமாதான அணுகுண்டு வெடிப்புகள் நடைபெறலாம். இரண்டாவது பனமா கால்வாயைத் தோண்டும் யோசனை பல காலமாகவே இருந்து வருகிறது

ஆஸ்திரேலியாவின் மாண்டி பெல்லோ தீவுகளுக்கு அருகே கடற்கரை ஓரமாக உள்ள வெறுந் திடல் பகுதி ஒன்று புதிய துறைமுகத்துக்கான இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அணு சக்தியை சமாதான காரியங்களுக்குப் பயன்படுத்துவதற்கான 'பிளவ்ஷேர்' என்னும் அமெரிக்க திட்ட அமைப்புக்கும் ஆஸ்திரேலிய மாகாண அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன.

துறைமுக அணுகுண்டு வெடிப்பு பரிசோதனை 1967ல நடைபெறக்கூடும். இது வெற்றிகரமாகச் செயல்படுமானால், அணு சக்தியை மனித குலத்தின் நன்மைக்காகப் பாதுகாப்பாகப் பயன்படுத்த முடியும் என்பது நிரூபிக்கப்பட்டு விடும். இப்பரிசோதனைக்கான அணுகுண்டின் கதிரியக்கத்தைத் தடுக்க அது 600 அடி ஆழத்தில் புதைக்கப்பட்டு வெடிக்க வைக்கப்படும்.

இவ்விதமாக ஏற்படுத்தப்படும் துறைமுகம் இரும்புக் கனிக் கப்பல்களுக்குப் பயன்படுத்தப்படும்.

இத்திட்டத்துக்கு ஆஸ்திரேலிய அமெரிக்க அரசாங்கங்

களின் அங்கீகாரத்தைப் பெறுவதில் சங்கடம் இருக்காது என்று எதிர்பார்க்கப் படுகிறது. ஆனால் ரஷியா என்ன கருத்தைத் தெரிவிக்கும் என்று நிச்சயமாகத் தெரியவில்லை. எனினும் ரஷியா அவ்விதத் திட்டத்தை ஆட்சேபிக்கும் என்று எஞ்ஜினீயர்கள் சந்தேகிக்கின்றனர்.

* * *

## ஓட்டலில் தட்டு கழுவிய தொழிலாளி 12 அடுக்கு மாளிகைக்கு முதலாளி

பான். (டாட) மே. 15–25 வயது இளைஞரான பீட்டர் மேற்கு ஜெர்மனியில் இன்று மிகப்பெரிய தொழிலதிபராக விளங்குகிறார். நாட்டிலேயே மிக இளமையான தொழிலதிபர் இவர் தான். இன்னும் மாணவராகவே இருந்துவரும் பீட்டர், மாணவர்களின் சங்கடத்தை உணர்ந்து அதைத் தீர்க்க முனைந்திருப்பதில் வியப்பேதுமில்லை. பீட்டர் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவரல்ல. ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த அவர், பான் வாழ்க்கை பிடிக்காமல், ஒருவரிடம் பணம் கடன் வாங்கி அமெரிக்கா சென்றார். அமெரிக்காவில், ஓட்டலில் பாத்திரம் துலக்கும் வேலை உட்பட 42 விதமான வேலைகளைச் செய்து 1000 டாலர் சம்பாதித்துக் கொண்டு தாயகம் திரும்பினார். இந்த 1000 டாலரை மூலதனமாகக் கொண்டு வியாபாரத்தைத் தொடங்கினார்

முதலில் ஒரு கார் வாங்கிவாடகைக்கு விட்டார். அதைத் தொடர்ந்து பல வாடகைக்கார்களுக்கு உரிமையாளரானார். படிப்படியாக பல தொழில்களைத் தொடங்கினார். இன்று அவர் அலுவலகத்தில் 20 பெரிய அதிகாரிகள் வேலைபார்க்கிறார்கள். கல்லூரியில் பொருளாதாரத்தில் டாக்டர் பட்டம் பெறப் படித்து வரும் பீட்டர் கல்லூரி நேரம் போக மற்ற நேரங்களில் அலுவலக நிர்வாகத்தைக் கவனிக்கிறார்.

தற்சமயம் பான் நகரில் 12 அடுக்கு மாடிக் கட்டிடம் ஒன்றைக் கட்டிவருகிறார். பீட்டர் மாணவர்களுக்குக் குறைந்த வாடகையில் இடவசதி அளிப்பதற்காக அவர் இந்த மாணவர் ஓட்டலைக் கட்டுகிறார். இங்கு 300 மாணவர்கள் தங்க வசதி உண்டு. வெளிநாட்டு மாணவர்கள் தங்குமிடம் கிடைக்காமல் முக்கியமாக திண்டாடுவதை நேரடியாக அறிந்துள்ள பீட்டர், தமது ஓட்டலில் ஒரு குறிப்பிட்ட பகுதியை வெளிநாட்டு மாணவர்களுக்காகவே ஒதுக்கி இருக்கிறார். இந்த ஓட்டலைக் கட்டி முடிக்க ரூ. 56 லட்சம் செலவாகும்.

பல இலட்சம் ரூபாய்த் திட்டங்களைச் செயலாக்கும் மனத்துணிவு 25 வயது இளைஞர்களில் பெரும் பாலோருக்கு இருப்பதில்லை. பீட்டர் எந்தவிதமான கஷ்ட நஷ்டங்களையும் தாங்கும் அபார மனோதிடம் கொண்டவராக இருக்கிறார். என் வாழ்நாள் முழுவதும் சுதந்திரமான தொழிலதிபராகவே இருப்பேன்; என்ன சங்கடங்கள் வந்தாலும் சமாளிப்பேன் என்று பீட்டர் திடமாகக் கூறுகிறார்.

# கல்வித்துறையில் உள்ள சில குறைகள்

ஐயா,

சென்ற ஆண்டு ஜூன் 64 முதல் 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் நியமிக்கப்பட வேண்டும். ஒரு பள்ளியில் சராசரி வருகை 31க்கு மேல் இருந்தால் (ஓராசிரியர் பள்ளி) இருவர் நியமிக்கப்படலாம். இதே மாதிரி 55க்கு மூவரும் 75க்கு நான்கு பேர்களும் 95க்கு 5 பேர்களும் ஆக ஆசிரியர்கள் எண்ணிக்கை அமைய வேண்டும் என்று தமிழ் நாடு அரசாங்கம் உத்தரவிட்டது.

ஆனால் நடைமுறையில் பள்ளிக்கூடத்தின் இடவசதியைப் பார்த்துத்தான் ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அதாவது ஒரு பள்ளியில் 65 மாணவர்கள் படிக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். சராசரி வருகை 55. அரசாங்க உத்தரவுப்படி அந்தப் பள்ளிக்குக் குறைந்தது 3 ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். ஆனால் அப்பள்ளியின் இட வசதியோ 25 பேருக்குத்தான் இருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு அப்பள்ளிக்கு ஒரே ஒரு ஆசிரியர் தான் வேலை செய்ய முடியும். மேலும் கல்வி இலாகா டைரக்டர் பள்ளியில் இடம் இல்லை என்று சொல்லாமல் எல்லா பள்ளி வயது மாணவர்களையும் (5 வயது முதல் 11 வயது வரை) விஜயதசமிக்குள் சேர்த்துவிட வேண்டும் என்று உத்தரவு விடுகிறார். டெபுடி இன்ஸ்பெக்டர்கள் உடனே பள்ளி ஆசிரியர்களிடம் டைரக்டர் உத்தரவைக் காட்டி மிகவும் கடுமையாக நடந்து கொள்ளுகிறார்கள். ஆசிரியர்களும் வெகு சிரமப்பட்டு மாணவர்களைச் சேர்க்கிறார்கள். முடிவில், அரசாங்க உத்தரவுப்படியே ஆசிரியர்களை நியமிக்காமல் இடவசதியைக்கொண்டு ஆசிரியர்களை மறைமுகமாகப் பழைய முறையையே (40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர்) கையாளப்படுகிறது.

இவ்வாறு நடந்து கொண்டால் படிப்பின் தரம் எவ்வாறு உயரும்?

அடுத்தபடியாக மதிய உணவு பற்றிக் கவனிப்போம். அரசாங்கம் மாணவனுக்கு 6 பைசா வீதம், நன்கொடை தருகிறது. பஞ்சாயத்தில் 2 பைசா தரலாம் என்று உத்தரவு கூறுகிறது. 2 பைசா பொது மக்களிடம நன்கொடையாக வசூல் செய்யப்பட வேண்டும் ஆக ஒரு மாணவனுக்கு பத்து பைசாவிற்கு நல்ல தரமான உணவு அளிக்கப்பட வேண்டும், என அரசாங்கம் எதிர்பார்க்கிறது. ஆனால், பெரும்பாலும் 90 சத விகிதத்திற்கு மேல் பஞ்சாயத்து நன்கொடை தரப்படுவது இல்லை. பொதுவில் அரசாங்க மான்யம் 6 பைசா கொண்டுதான் பிள்ளைகளுக்கு உணவளிக்கப்படுகிறது. மதிய உணவு சமைப்பதற்காகச் சில பள்ளிகளில் ஆயாக்கள் உண்டு.

ஆனால் பெரும்பாலும் ஆசிரியர்களும், மாணவர்களும் சேர்ந்தே சமைக்கிறார்கள். ஒரு நேரப் படிப்பு வீணாகிறது. மதிய உணவிற்காக ஒவ்வொரு பள்ளியிலும், பொதுக்குழு, நிர்வாகக் குழு என்ற இரு குழுக்கள் இருக்கின்றன. இதற்கு சமூகக் கல்விக் குழு என்று பெயர். இதன் தலைவர் பஞ்சாயத்து போர்டு தலைவர் ஆவார். இந்தக் குழு மாதம் ஒருமுறை பள்ளியில் கூடி மதிய உணவிற்காக வேண்டிய பொருட்களைப் பொது மக்களிடமிருந்து நன்கொடையாக வசூலித்தல், கடைகளிலிருந்து பொருட்களை வாங்கி வந்து கொடுத்தல் போன்ற நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். செய்வதே கிடையாது ஏட்டளவில்தான் செயல்படுகின்றன. நடைமுறைக்கு வர முயற்சித்தால் பெரிய சண்டை வந்து விடுகிறது.

ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு பகுதி நேர ஆயாக்களைப் போட வேண்டும் எல்லா பொறுப்புகளையும் சமூகக் கல்விக் குழுவிடம் ஒப்புவிக்கப்பட வேண்டும். மதிய உணவு மாணவர்கள் வருகையை மட்டும் ஆசிரியர்கள் கணக்கு எடுக்க வேண்டும் அல்லது எல்லாப் பொறுப்புகளையும் ஆசிரியர்களிடம் விட்டு விட வேண்டும். ஹரிஜனப் பள்ளிகளுக்கும். கள்ளர் நலப் பள்ளிகளுக்கும் தருவதைப் போன்று பதினைந்து காசுக்கள் ஒவ்வொரு மாணவனுக்கும் தர வேண்டும். கண்டிப்பான முறைகளை மதிய உணவுத் திட்டத்தில் கையாள வேண்டும்.

எஸ். எஸ். எல். சி. படித்து விட்டு சர்வீஸ் கமிஷன் என்ற ஒரு பரீட்சையை எழுதிவிட்டு வந்துவிட்டால் ரூ. 90 ஊதியம் அதே எஸ்.எஸ்.எல்.சி. படித்து விட்டு இரண்டாண்டு பயிற்சி பெற்று விட்டு ஆசிரியர் வேலைக்கு வந்தால ரூ. 90 தான் ஊதியம். குமாஸ்தா பெரும் பதவிக்குப் போகலாம். ஆனால் ஆசிரியர் போக முடியாது. ஹையர் கிரேடு ஆசிரியருக்கு எல்.டி.சி ஊதியமும, ஒரு செகண்டரி கிரேடு ஆசிரியருக்கு யு.டி.சி. ஊதியமும் கொடுக்க நமது அரசாங்கம் முன் வர வேண்டும்.

—முனிராஜு முதலியார்
(திருப்பத்தூர்)

---

## ஆசிரியர் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம பற்றிப் பரிசீலனை லோக் சபையில் அமைச்சர் தகவல்

புதுடில்லி, ஏப். 21—ஆசிரியர்களுக்குத் தேசிய குறைந்தபட்ச ஊதிய மொன்றை நிர்ணயிக்கும் பிரச்னையை சர்க்கார் தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருப்பதாகக் கல்வி மந்திரி திரு. எம். சி. சாக்ளா லோக சபையில் தெரிவித்தார்.

ஆசிரியர்களின் நிலை பற்றி மெம்பர்களின் கவலையைப் பிரதிபலிக்கும் அநேக கேள்விகளுக்குத் திரு. சாக்ளா பதிலளித்தார்.

# ஏழைகளின் பயிர்

[இந்தியாவில் உற்பத்தியாகும் முக்கிய தானிய வகைகளில் மக்காச்சோளமும் ஒன்றாகும். அண்மை ஆண்டுகளில், புதிய கலப்பின மக்காச்சோள ரகங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. இவை அதிக மகசூலைத் தருகின்றன. அதனால், இந்திய விவசாயிகள் இவற்றைப் பயன்படுத்துவதில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். இதைப் பற்றி இச்சிறப்புக் கட்டுரை விளக்குகிறது]

மக்காச்சோளம் முக்கியத்துவம் பெற்றுள்ள பிற நாடுகளிலும் புதிய கலப்பின ரகங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. இந்தியாவில் ஏற்கெனவே, ஒன்பது மிகச் சிறந்த கலப்பின மக்காச்சோள ரகங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

ஏழைகளின் பயிர் என்ற பெயர் பெற்றுள்ள மக்காச்சோளம், கிராம மக்களின் முக்கிய உணவுப் பொருள்களாக விளங்குகிறது. சக்தியளிக்கும் கார்போஹைட்ரேட்டுகளும், புரதம், வைட்டமின்கள், கால்சியம், இரும்பு ஆகிய சத்துக்களும் இதில் உள்ளன.

## முக்கியப் பயிர்

இந்தியாவில் உற்பத்தியாகும் 'கரீப்' பருவ முக்கிய பயிர்களில், மக்காச்சோளமும் ஒன்றாகும். பயிராகும் பரப்பளவில் சுமார் 100 லட்சம் ஏக்கராவில் இது சாகுபடி செய்யப்படுகிறது. எனினும், வருடாந்திர மக்காச்சோள உற்பத்தி, மொத்தம் 1,000 லட்சம் மணங்குதான். இதிலிருந்து ஏக்கருக்கு 10 மணங்குதான் பயிராகிறது என்று தெரிகிறது. மேற்கு நாடுகளில் காணும் சராசரி மகசூலில் இது சுமார் நான்கில் ஒருபாகமாகும். தரமான வித்துக்கள் இல்லாததே இவ்வித உற்பத்திக் குறைவுக்குக் காரணமாகும். இந்த வகையில் ஆராய்ச்சி செய்து தற்போது கலப்பின மக்காச்சோள ரகங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. இவை ஏக்கராவுக்கு 40 முதல் 80 மணங்கு வரை உற்பத்தியாகின்றன.

இனி கலப்பின மக்காச்சோளம் என்றால் என்ன என்பதைப் பற்றிச் சிறிது பார்ப்போம். இது புதுரக மக்காச்சோளமாகும். தொடர்ச்சியான உற்பத்தி முறைகள் மூலம் இது உற்பத்தி செய்யப்படுகிறது. முதற்கண், தனியின அபிவிருத்தி அடிப்படையிலான விதைகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. இவையே கலப்பின ரகங்களுக்கு அடிப்படை. இவ்வித நான்கு வகை விதைகளைக் கலந்து கலப்பின விதை உருவாக்கப்படுகிறது. தனியாகப் பார்க்கும்போது தன்னின

விருத்தி அடிப்படையிலான விதைகள் குறைபட்ட வளர்ச்சியுடன் குறைந்த மகசூலையும் தருகின்றன. அவற்றைச் சரியான விகிதத்தில் ஒன்றுக்கொன்று கலக்கும்போது இறுதியில் உற்பத்தியாகும் கலப்பின ரகங்கள் மிகச் சிறந்தவையாகவும் உற்பத்தியை அதிகரிப்பவையாகவும் விளங்குகின்றன.

கலப்பின மக்காச்சோள உற்பத்தி, பயிர் அபிவிருத்தியில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். இன்று அமெரிக்காவில் மக்காச்சோளம் பயிராகும் பரப்பளவில் 95 சதவிகிதப் பரப்பில் கலப்பின ரகங்கள் பயிராக்கப்படுகின்றன.

## சிறந்த கச்சாப் பொருள்

தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளில், ஏராளமான தொழில் துறைப் பண்டங்களுக்கு மக்காச்சோளம் கச்சாப் பொருளாகப் பயன்படுகிறது. இதன் மேல் தோல், உறைகள் செய்யவும், தண்டும் இலைகளும், காகிதம், காகித அட்டைகள், பாய்கள் சிப்பம் கட்டும் பொருள்கள் முதலியவை செய்யவும் பயன்படுகின்றன. சோளம் நீக்கப்பெற்ற கொண்டைப் பகுதிகள் எரிபொருளாகவும், தக்கையாகவும் பயன்படுவதுடன், உரோமங்களைச் சுத்திகரித்தல், உலோகங்களைப் பளபளப்பாக்குதல், பெட்ரோல், டீசல் யந்திரங்களிலிருந்து கார்பனை நீக்குதல், தகரம், குழாய்கள் ஆகியவற்றிலிருந்து எண்ணெய்ப் பசையை நீக்குதல் ஆகிய காரியங்களுக்கும் உதவுகின்றன.

மக்காச்சோளத்தில் 55 சதவிகிதம் மாவுச் சத்தும் (ஸ்டார்ச்சும்), 26 சதவிகிதம் க்ளூடனும், 3 சதவிகிதம் எண்ணெயும் 16 சதவிகிதம் தண்ணீரும் இருக்கின்றன. மாவுச்சத்தும் (ஸ்டார்ச்சும்), அதிலிருந்து தயாரிக்கப்படும் பாகு, சர்க்கரை முதலிய பொருள்களும் பல்வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. ஒட்டும் பசைகள், ரொட்டிக் கடைத் தயாரிப்புகள், வறுக்கும் பௌடர், மிட்டாய் தயாரிப்புகள், அழகு சாதனங்கள், பழவகை உணவு, வெடி மருந்துகள், சலவைச்சாலை, துணிகள், காகிதப் பெட்டிகள் ஆகியவற்றுக்கு ஸ்டார்ச் உபயோகப்படுகிறது. கால்நடைகளுக்கும் கோழிகளுக்கும் க்ளூடன் உணவுப் பொருளாகப் பயன்படுகிறது. மக்காச்சோள எண்ணெய் பூச்சிக்கொல்லி மருந்துகளைக் கலந்து தெளிப்பதற்கும், சமையலுக்கும், தோல் பதன வேலைக்கும், சோப்பு, வனஸ்பதி தயாரிப்புக்கும் பயன்படுகிறது.

மக்காச்சோளம் தொழில் துறையில் உபயோகமாகும் அளவைக் கொண்டே, அது நமது பொருளாதார வளத்தை எந்த அளவுக்கு உயர்த்த முடியும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

## ஏக்கருக்கு 200 ரூ. லாபம்

அதிக மகசூலைக் கொடுக்கும் கலப்பின மக்காச்சோளத்தை உற்பத்தி செய்வது மிகச் சிரமமான

காரியம் என்பதில் ஐயமில்லை. அதற்கு அதிக முதலீடும் தேவை. ஆயின் உழைப்புக்கும் செலவழிக்கும் பணத்துக்கும் ஏற்ற வகையில் நல்ல விளைச்சல் கிடைக்கிறது. அதன்மூலம் ஏக்கர் ஒன்றுக்கு 200 ரூபாய் வீதம் அதிக லாபத்தை அடைய முடியும்.

சாதாரண ரக மக்காச்சோளப் பயிருக்கு அதிகமான உரம், ஏற்ற அளவில் ரசாயன உரம் ஆகியவற்றை உபயோகிப்பதன் மூலமும், ஏற்ற பருவத்தில் விதைத்தல், அவசியமான இடைவெளி விட்டுப் பயிராக்குதல் ஆகியவற்றின்மூலமும் அதன் உற்பத்தியை இரண்டு அல்லது இரண்டரை மடங்குதான் அதிகரிக்க முடியும். ஆயின் கலப்பின ரக மக்காச்சோளத்தைப் பயிராக்குவதன் மூலம் இன்னும் அதிக மகசூலைப் பெறலாம்.

அரிசி, கோதுமை, பார்லி, சோளம், கம்பு போன்ற எந்தவொரு தானியப் பயிரைக் காட்டிலும் கலப்பின மக்காச்சோளந்தான் அதிக அளவில் மகசூலைக் கொடுக்கிறது. எனவே, உணவுப் பெருக்கத்திற்காகவும், பிற உபயோகத்திற்காகவும் இதைப் பயிராக்குவது நல்ல பலனைத்தரும்.

—"கிராமநலம்"

---


# புதுமுறை சங்க வாய்பாடு

(V. K. சேஷாத்திரி, B. A., L. T.,

Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0-13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும். அதற்குக் குறைந்து, புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 25% கழிவு கொடுக்கப்படும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

# கல்வித் துறைச் செய்திகள்!

## கல்வி டைரக்டர் அலுவலகச் சீரமைப்பு

### 4–வது திட்டத்தில் பெரும் பொறுப்பை ஏற்க ஏற்பாடு

### திரு. சுந்தரவடிவேலு உயர் கல்வி நெறியாளர் ஆகிறார்.

சென்னை, மே. 20—கல்வி டைரக்டர் காரியாலயம் இரு பிரிவுகளாக அமைக்கப்பட்டுள்ளது. உயர் நிலைக் கல்விக்கு ஒரு டைரக்டரும், செகண்டரிக் கல்விக்கு ஒரு டைரக்டரும் இருப்பார்கள்.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் பயனாக, தமிழகம் கல்வித் துறையில் சிறப்பான முன்னேற்றம் அடைந்திருக்கிறது. மாநில சீரமைப்புக்குப் பிறகு முதல் ஆண்டில் அதாவது 1957–58–ம் ஆண்டில் கல்விக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ. 11 கோடி. கல்விச் செலவு 1960-61–ல் ரூ. 14 கோடியாக உயர்ந்திருக்கிறது. தற்போது ரூ. 35 கோடி அளவுக்குச் செலவு உயர்ந்திருக்கிறது. முந்நூறுக்குக் குறையாத மக்கள் தொகையுள்ள பகுதிகள் எங்கிலும் தொடக்கப் பள்ளிகள் உள்ளன. இரண்டாவது திட்ட கால முடிவில் 1400 செகண்டரிப் பள்ளிகள் உள்ளன. ஆண்டுதோறும் எஸ் எஸ்.எல்.ஸி. தேர்வு செல்லும் மாணவர்கள் எண்ணிக்கை பெருமளவில் பெருகி வருகிறது. இரண்டாவது திட்டக் கால முடிவில் தமிழ்நாட்டில் 79 கலைக் கல்லூரிகள் இருந்தன. அவற்றுள் அரசாங்க கலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை 13 ஆகும். இந்த ஆண்டில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் 7 அரசாங்கக் கலைக் கல்லூரிகளையும் சேர்த்து, 100–க்கு மேல் கலைக் கல்லூரிகள் இருக்கும் நிலை விரைவில் ஏற்படும்.

இங்ஙனம் கல்வி அபிவிருத்திப் பணிகளால் கல்வித் துறைக்குப் பொறுப்புக்கள் மிகுதியாகிவிட்டன. குறிப்பாக அரசாங்கத் தேர்வுகள் கமிஷனராகவும் பொது நூலகங்களின் நெறியாளராகவும் உள்ள கல்வித் துறை இயக்குநருக்குப் பொறுப்புகள் மிகுதியாகஇருக்கின்றன. எனவே கல்வித் துறையில் செகண்டரிக் கல்விக்கும் (தொடக்கக் கல்வி உட்பட) உயர் நிலைக் கல்விக்கும் தனித்தனிப் பிரிவுகள் ஏற்படுத்த வேண்டியது பற்றி சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட பல தரப்பிலிருந்தும் யோசனைகள் கூறப்பட்டது.

நான்காம் திட்டத்தில் பெருமளவில் மேற்கொள்ளவிருக்கும் கல்விப் பணிகளைக் கருதியும்,

கல்வித்துறை நிர்வாக வசதிகளைக் கருதியும், அந்த யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. அதன்படி பொதுக்கல்வி நெறியாளர் அலுவலகம், உயர்நிலைக் கல்வி நெறியாளர் பிரிவு என்றும் செகண்டரி கல்வி நெறியாளர் பிரிவு என்றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. உயர்நிலைக் கல்வி நெறியாளர் பொது நூலகங்கள் நெறியாளராகவும் இருப்பார். செகண்டரிக் கல்வி நெறியாளர் தொடக்கக் கல்வி உட்பட செகண்டரிக் கல்வி சம்பந்தமாகக் கவனிப்பதோடு, பாடப்புத்தகங்களை நிர்ணயிக்கும் பொறுப்பையும் கவனித்துக் கொள்வார். இதற்கான அரசாங்க உத்தரவு உடனடியாக அமுலுக்கு வருகிறது.

பொதுக் கல்வி நெறியாளர் திரு. என். டி. சுந்தரவடிவேலு உயர்நிலைக் கல்வி டைரக்டராகப் பதவி மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார். இந்திய அரசாங்கப் பதவிக்கு அனுப்பப்பட்டிருக்கும் டாக்டர் எம். டி. பால் தற்போதைய பதவி நிலையில் மாறுதல் ஏதுமின்றி செகண்டரிக் கல்வி டைரக்டராக நியமிக்கப்பட்டிருக்கிறார். பொதுக்கல்வி (பாடப்புத்தகங்கள்) துணை டைரக்டராக திரு. வி. டி. டைட்டஸ் தற்காலிகமாக செகண்டரிக் கல்வி டைரக்டராக இருப்பார்.

---

## உயர் தொடக்கப் பள்ளி எதிலும் கட்டணம் வாங்கக் கூடாது
## சென்னை அரசினர் உத்திரவு

### தற்போது வசூலித்து வரும் 300 பள்ளிகளுக்கும் பொருந்தும்

### வரும் கல்வி ஆண்டிலிருந்து அமுலுக்கு வரும்

### பிற பள்ளிகளைப் போல அவற்றுக்கும் மானியம் கிடைக்கும்

சென்னை, மே. 18 - எஸ். எஸ். எல். ஸி. வரை கல்வி இலவசமாக இருக்க வேண்டும் என்ற சர்க்காரின் கொள்கையை யொட்டி, வருகிற கல்வியாண்டிலிருந்து ராஜ்யத்திலுள்ள எந்த உயர்தர ஆரம்ப (ஹையர் எலிமெண்டரி) பள்ளியும் சம்பளம் வசூலிக்கக் கூடாது என்று சென்னை சர்க்கார் இப்போது உத்திரவு பிறப்பித்திருக்கிறது.

தற்போது சென்னை ராஜ்யத்தில் சுமார் 300 உயர்தர ஆரம்ப பள்ளிகள் சம்பளம் வசூலித்து வருகின்றன. இனி இவையும் சம்பளம் வசூலிக்கக் கூடாதென உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

பிற பள்ளிகளுக்கு அளிக்கப்படுவது போல, இவற்றுக்கும் மானியம் அளிக்கப்பட்டு, இந்த நஷ்டம் ஈடு செய்யப்படும் என்று சர்க்கார் உறுதி கூறியுள்ளது.

சம்பளம் வசூலிக்கும் 300 பள்ளிகளையும், இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ்க் கொண்டுவரும் வகையில், சென்னை கல்வி விதிகளில் உரிய திருத்தங்கள் செய்யப்படுகின்றன.

இலவசக் கல்வித் திட்டத்தை சென்ற கல்வி ஆண்டிலிருந்து, சர்க்கார் அமல் நடத்தி வந்த போதிலும் மேற்கூறிய பள்ளிகள் சர்க்காரிடமிருந்து மானியம் பெறுமல், தொடர்ந்து சம்பளம் வசூலித்து வந்தன.

மெட்ரிகுலேஷன் பரீட்சைக்காக வகுப்புகள் நடத்தி வரும் பள்ளிகளுக்கும் கான்வெண்டுகளுக்கும் இந்தத் திட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருப்பது நினைவிருக்கலாம்.

6 லிருந்து 11 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் கிட்டத்தட்ட 72 சதவிகித பேர் 3—வது திட்ட இறுதிக்குள் பள்ளிகளில் சேர்ந்து படித்து வருவார்கள் என்று கல்வி இலாகா அதிகாரிகள் நம்புகின்றனர்.

இந்தச் சாதனையின் அடிப்படையில் பார்த்தால், அடுத்த 4 வருஷ காலத்தில் இந்த வயதுப் பிரிவினரில் நூற்றுக்கு நூறு பேர் பள்ளிகளில் சேர்ந்து படிக்கும் நிலைமைக்கு நிச்சயமாகத் திட்டமிட முடியுமென்றும் நம்புகின்றனர்.

இத்த விஷயத்தில் சென்னை ராஜ்யம் மற்ற ராஜ்யங்களைவிட பெருமளவு முன்னேற்றம் கண்டிருப்பதாகச் சொல்லலாம். ஏனெனில், நாடு பூராவுக்குமே 87·7 சதவிகிதம் தான் 4—வது திட்டத்தின் கீழ் இலக்காக கொள்ளப்பட்டிருக்கிறது.

## நடுத்தரக் கல்விக்கு சுயேச்சையான போர்டு வேண்டும்

## ஆரம்பப் படிப்புக்கும் ஜில்லா அளவில் தனி அமைப்பு

### கல்விக் கமிஷனின் யோசனைகள்

ஸ்ரீநகர், ஜூன். 4—ராஜ்யங்களில் கல்வித்துறை பூராவையும், இணக்கமான முறையில் அபிவிருத்தி செய்வது பற்றி சர்க்காருக்கு யோசனை கூறுவதற்காக ராஜ்ய கல்விக் கவுன்சில்களை அமைக்கவேண்டுமென்று இந்தியாவின் கல்விக் கமிஷன் யோசனை தெரிவித்துள்ளது.

இன்று ஸ்ரீநகரில் கல்வி இலாகா காரியதரிசிகள், கல்வி இலாகா டைரக்டர்கள் அடங்கிய மகாநாட்டில் இந்த யோசனை தெரிவிக்கப்பட்டது. கல்விக் கமிஷன் தயாரித்துள்ள ஒரு யாதாஸ்தின் மீது இம் மகாநாட்டில் விவாதம் நடைபெற்றது.

கல்வித் திட்டத்தின் பல்வேறு அம்சங்களைக் கவனித்துக் கொள்ள விசேஷ கமிட்டிகளோ அல்லது நிரந்தர கமிட்டிகளோ ஏற்படுத்தலாம் என்றும் கல்விக் கமிஷன் கூறியிருக்கிறது.

கல்வி இலாகாவின் நிர்வாகப் பணியையும், மேற்பார்வைப் பணியையும் தனித்தனியாகப் பிரிப்பது சம்பந்தமாகவும் கமிஷன் யோசனை கூறியுள்ளது. கல்வி ஸ்தாபனங்களை நிர்வாகிப்பதற்காக கல்வி இலாகாவின் பொதுவான கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாய், சுயாதிகாரத்துடன் கூடிய குழுக்களை அமைக்கலாம் என்று கூறுகிறது.

எல்லா சர்க்கார் செகண்டரி பள்ளிகளையும் நிர்வகிப்பதற்காக சுயாதிகாரத்துடன் கூடிய போர்டு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அதே போல ஒவ்வொரு ஜில்லாவிலும் ஆரம்பக் கல்வி வளர்ச்சியை கவனித்துச் சட்டபூர்வமான போர்டுகளை ஏற்படுத்தவேண்டும். பிரைமரி, மிடில் ஆகிய இரு கட்டங்களையும் சேர்ந்த ஆரம்பக் கல்வியை இது கவனித்துக்கொள்ள வேண்டும். இவற்றில் ஜில்லா பரிஷத் அல்லது பஞ்சாயத்து சமிதி பிரதிநிதிகளும் அதிகார சார்பற்ற கல்வித் துறையினரும் இருக்க வேண்டும் என்று கமிஷன் கூறுகிறது.

செகண்டரி கல்வி போர்டைப் பொறுத்தவரை முழுநேர சேர்மனுடன் கூடிய கச்சிதமான குழுவாக அது இருக்க வேண்டும். உப அத்யட்சகருக்குள்ள அந்தஸ்து அவருக்கு இருக்க வேண்டும். சர்வகலாசாலைகளின் பிரதிநிதிகளும், மற்றும் பிற பொதுநல பிரதிநிதிகளும் அதில் இருகக வேண்டும்.

கணிதம் உள்ளிட்ட, விஞ்ஞான அறிவு வளர்ச்சி விஷயத்தில் முனைப்புக் காட்டும் அதே சமயத்தில் கலை இயல் பாடங்கள் விஷயத்திலும் விசேஷ கவனம் செலுத்த வேண்டும் என்று திரு. சாக்ளா இக்கூட்டத்தில் கூறினார்.

கலை இயல் பாடப் பயிற்சிக்காக விசேஷ கோடை வகுப்புக்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்றார்.

---

## பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் உத்தியோக மாற்றலைக் கவனிக்கப் போர்டுகள்

கோயமுத்தூர், ஜூன், 4— ராஜ்யத்தில் பஞ்சாயத்து யூனியன்களால் நடத்தப்படும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் வேலை செய்யும் ஆசிரியர்களின் உத்தியோக மாற்றல்கள் சம்பந்தமான மனுக்கள் அல்லது பிரேரணைகளை இனி அட்ஹாக் போர்டுக்கு ரெவினியூ டிவிஷனல் அதிகாரி தலைமை வகிப்பார்.

சர்க்கார் சமீபத்தில் பிறப்பித்த ஒரு உத்தரவுப்படி ரெவினியூ டிவிஷனல் அதிகாரி தவிர, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், பஞ்சாயத்து யூனியன் தலைவர், பிரஸ்தாப பஞ்சாயத்து யூனியன் மீது அதிகார வரம்புள்ள கல்வி அதிகாரி ஆகியோர் இந்தப் போர்டில் இருப்பர். உத்தியோக மாற்றலுக்கான மனுக்களை ஏப்ரல் அல்லது மே யில் போர்டு பரிசீலித்து முடிவு செய்யும். சாதாரண

மாகக் கல்வியாண்டின் நடுவில் ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியரின் உத்தியோக மாறுதலுக்கான எந்த மனுவோ அல்லது பிரேரணையோ பரிசீலிக்கப்படமாட்டாது. எனினும் சில பிரத்தியேக சந்தர்ப்பங்களில் கல்வியாண்டின் மத்தியில் உத்தியோக மாற்றலைச் செய்ய ஜில்லா கலெக்டரின் அங்கீகாரம் தேவை.

உத்தியோக மாற்றல்களை கவனிக்க உடனடியாக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் அட்ஹாக் போர்டுகள் நியமிக்கப்படும்.

## ஆரம்பக் கல்விக் கட்டத்திலிருந்தே விஞ்ஞான போதனை அவசியம்

### பல்கலைக் கழகத்தில் துணை வேந்தர் திரு. ஏ. எல். முதலியார் கருத்து

சென்னை. ஜூன். 3—ஆரம்பக் கல்வி கட்டத்திலிருந்தே விஞ்ஞானத்தை பற்றிய எளிய அடிப்படைகளைக் கற்றுக் கொடுப்பது நல்லது என்று சென்னை சர்வ கலாசாலை துணைவேந்தர் டாக்டர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியார் இன்று அபிப்பிராயம் தெரிவித்தார்.

விஞ்ஞான அறிவு வளரவேண்டுமானால், குழந்தைகளின் இளம் பருவத்திலேயே இதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். புத்தக அறிவு மட்டும் போதாது; அது என்ன, இது என்ன என்று பார்த்துக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் ஆவலுக்கு ஊக்கமளிக்க வேண்டும். இதற்கு ஆசிரியர்கள் உதவி செய்ய முன் வரவேண்டும்-என்று திரு. முதலியார் கூறினர்.

## படித்த பெண்கள் விகிதம்

### தமிழ் நாட்டுக்கு 5—வது இடம்

ஆண்கள், பெண்கள் இரு விஷயத்திலும் எழுத்தறிவு விகிதத்தில் இந்தியாவிலேயே டெல்லி ராஜ்யம் முதலிடம் வகிக்கிறது. முன்னர் கேரளா வகித்து வந்த இடத்தை இப்போது டில்லி கைப்பற்றியுள்ளது. கடந்த பத்தாண்டுக்காலத் திட்ட வேலை மூலம் நாட்டில் எழுத்தறிவு எந்த அளவுக்கு அதிகரித்துள்ளது என்பது பற்றிய ஒரு அறிக்கையில் இந்தத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை திட்டக் கமிஷனில் கல்வி நிபுணர்கள் தயாரித்ததாகும்.

பெண்களைப் பொறுத்த வரையில் 1000 பெண்களில் 425 பேர் வீதம் படிக்காதவர்களாக உள்ளனர். அதாவது அங்கு மொத்த பெண்களில் ஏறக்குறைய பாதிப் பேர் எழுத்தறிவு உள்ளவர்களே. பெண்களில் ஆயிரத்தில் எவ்வளவு பேர் படித்தவர்கள் என்னும் அடிப்படையிலான இந்த விகித அளவு கேரளாவில் 389 ஆக டெல்லிக்கு அடுத்தபடியாக இரண்டாவதாக உள்ளது. பாண்டிச்சேரியில் இது 246 ஆகவும்.

அந்தமான் நிக்கோபர் தீவுகளில் 194 ஆகவும் உள்ளது.

இது ஐந்தாவதாக உள்ள தமிழ் நாட்டில் 182 ஆகவும், ஆறாவதாக உள்ள மேற்கு வங்காளத்தில் 170 ஆகவும், ஏழாவதாக உள்ள மகாராஷ்டிராவில் 168 ஆகவும் உள்ளது.

பெண் கல்வியில் உத்திரப் பிரதேசம் தான் பின்தங்கி நிற்கிறது. அங்குள்ள பெண்களில் ஆயிரத்தில் 70 பேர் தான் எழுததறிவு கொண்டவர்கள். காஷ்மீரில் இது 45 ஆகவும். நேபாளில் 15 ஆகவும் உள்ளது.

கடந்த பத்தாண்டு காலத்தில் நாட்டில் பெண்களிடையே எழுத்தறிவு விகிதம் இரட்டித்துள்ளது. ஆண்டுகளைப் பொறுத்த வரையில் இது 70 சதவிகிதம் அதிகரித்துள்ளது. அகில இந்திய சராசரிக் கணக்குப்படி பெண்களில் ஆயிரத்தில் 129 பேரும், ஆண்களில் ஆயிரத்தில் 344 பேரும் எழுத்தறிவு கொண்டவர்களாக உள்ளனர்.

ஆண்களிடையிலான எழுத்தறிவு விகிதத்திலும் டெல்லி முதலிடம் வகிக்கிறது. அங்கு ஆண்களில் ஆயிரத்திற்கு 608 பேர் எழுத்தறிவு கொண்டவர்களாக உள்ளனர். இரண்டாவதாக உள்ள கேரளாவில் இந்த விகிதம் 550 ஆகவும், மூன்றாவதாக உள்ள பாண்டிச்சேரியில் இது 504 ஆகவும் உள்ளது.

ஆண்கள், பெண்கள் இருவர் விஷயத்திலும எழுத்தறிவு விகிதத்தில் முன்னர் கேரளா தான் முதலிடம் வகித்தது. கடந்த 10 ஆண்டில் இந்த இடத்தை டெல்லி பிடித்துக் கொண்டு விட்டது.

மொத்தத்தில் ஆண்கள்-பெண்கள் இருவரையும சேர்த்துக் கணக்குப் போட்டால்-டெல்லி ராஜ்யததில் ஆயிரத்தில் 527 பேர் படித்தவர்களாக உள்ளனர். இது கேரளாவில் 468 ஆகவும், பாண்டிச்சேரியில் 3.0 ஆகவும் உள்ளது.

---

## ‘மாணவராக காந்திஜி’

---

### புத்தகம் வெளியிடப்பட்டது

---

புதுடில்லி. ஜூன். 4—மகாத்மா காந்தி ஒரு மாணவர் என்ற பெயரில் ஒரு நூலை தகவல் மந்திராலயத்தின் பிரசுர பிரிவு வெளியிட்டிருக்கிறது.

அப்புத்தகத்தில் பல சித்திர விளக்க படங்கள் பள்ளி ரிஜிஸ்தர் புத்தக படங்கள், பரீட்சை வினாத்தாள்களின் படங்கள் ஆகியவை அடங்கியுள்ளன. காந்திஜி முன்னர் படித்த அல்பிரட் ஹைஸ்கூலின் முன்னாள் தலைமையாசிரியர் திரு. கே. என். உபாத்யாய் இபுத்தகத்தைத் தயாரித்துள்ளார்.

பள்ளி ரிகார்டுகளிலிருந்தும் காந்திஜியின் ஆசிரியர்களிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் விளக்கங்கள் சேகரிக்கப்பட்டு இப் புத்தகத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

---

# அமெரிக்கா பற்றி

## உங்கள் கேள்விகள்

எத்தனை அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் நூலகங்கள் உண்டு? விளையாட்டு அரங்குகள் உள்ளவை எத்தனை?

—எம். சுந்தர், பம்பாய்.

அமெரிக்காவின் ஐம்பது மாநிலங்களிலுமாக மொத்தம் 2,200 கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றிலும் நூலகம் உண்டு. இவையெல்லாவற்றிலும் ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் இருப்பதுதான் மிகப்பெரிய நூலகம். அது 1638-ல் ஏற்பட்டது; ஜான் ஹார்வர்டு என்பவர் உயில் எழுதிவைத்த 400 புத்தகங்களோடு தொடங்கிய அந் நூலகத்தில் இன்று 60 இலட்சம் புத்தகங்கள் உள்ளன. பத்து லட்சம் புத்தகங்களுக்குமேல் இருக்கும் நூலகங்கள் உள்ள பல்கலைக் கழகங்கள் இருபத்தைந்துக்கு மேலாகும். பலகலைக் கழக நூலகங்களில் ஐந்து ஆண்டுகளில் நூற்றுக்கு 20 பங்கு அதிகரிப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

கல்வி நிலையத்துக்கு நூலகம் போலவே விளையாட்டுக் களமும் இன்றியமையாததாகும். மாணவர்கள் விளையாடுவதற்கேற்ற சிறந்த வசதிகள் இல்லாத கல்லூரி, பல்கலைக் கழகம் ஒன்று கூட அமெரிக்காவில் இல்லை; என்றாலும், அவற்றில் சிலவற்றில் தான் பெரிய விளையாட்டு அரங்குகள் உள்ளன. 20,000 பேர் இருந்து பார்க்க வசதியான பெரிய விளையாட்டு அரங்குகள் உள்ள கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் 91 ஆகும். இந்த அரங்குகள் எல்லாவற்றிலும் பெரியது ஆன் ஆர்பர் நகரில் உள்ள மிசிகன் பல்கலைக் கழகத்தின் விளையாட்டரங்கே; அங்கு 1,00,100 பேர்கள் இருக்க வசதி உண்டு.

* * *

அமெரிக்கர் சந்திரனில் போய் இறங்க எத்தனை ஆண்டுகள் ஆகும்?

—எஸ். டி. ஆதிசேஷ், மைசூர்.

1970-ம் ஆண்டுக்குள் விண்வெளி விமானியும் விஞ்ஞானியுமான அமெரிக்கர் ஒருவர் சந்திரனில் போய் இறங்க வேண்டும் என்பது அமெரிக்காவின் திட்டம். ஆனால் அது மெய்யாக எப்பொழுது நடக்கும் என்பது போகப் போகத்தான் தெரியும்; ஏனெனில் சந்திரனுக்கு மனிதனை ஏற்றிச் செல்லும் வாகனத்தின் இயந்திர அமைப்புகள், விண்வெளி நிலைமை இவை பற்றியெல்லாம் சிறப்பான ஆராய்ச்சிகள் செய்து பார்த்த பிறகே புறப்பட முடியும். அர்புவி செல்லும் அமெரிக்க செயற்கைக்கோளை விண்வெளியில் செலுத்தும் போது பிசகு ஏதாவது நேர்ந்தால் உயிர் தப்புவதற்கான ஏற்பாடும் உண்டு; சென்ற மாத ஆரம்பத்தில் அதைச் சோதித்துப் பார்த்தார்

கள்; ஏற்பாடு தகுந்த வெற்றி என்பது புலனாயிற்று. 1970-க்குள் அம்புலியைப் பிடிக்க வேண்டும் என்ற அமெரிக்கத் திட்டம் இவ்வாறு மேலும் ஒரு படி முன்னேறியது.

அமெரிக்காவின் அம்புலித் திட்டம் அப்பாலோ என்பது; அத்திட்டப்படி சந்திரனை நோக்கிச் செல்லும் அமெரிக்க விண்வெளி விமானிகள் முதலிலேயே நேரே அங்கே போய் இறங்கிவிடமாட்டார்கள்; முதலில் சந்திரனை அணுகி விண்வெளியிலேயே அதை வளையம் வருவார்கள். இந்த முயற்சி 1965-66 ஆண்டுகளில் தொடங்கும். அதன் பிறகு பூமியிலிருந்து கிளம்பும் அடுத்த அப்பாலோ செயற்கைக் கோள்தான் அம்புலியில் இறங்கும். இது 1970 வாக்கில் நடைபெறும். இந்தக் கோளை விண் வீதியில் செலுத்துவதற்காக ஒரு மாபெரும் ஏவுகணை உருவாகிக்கொண்டிருக்கிறது; இதன் பெயர் ஸாட்டர்ன்-5. உலகத்திலேயே இதைவிட அதிக ஆற்றல் பெற்ற ஏவுகணை வேறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

அமெரிக்காவின் இன்றைய கவிஞர்களுள் சிறந்த கவிஞர் யார்?

—எம். ஏ. காதர், போரன்பூர், மே. வங்கம்;
வெ. சுப்பிரமணியன், மாயனூர்;
ஏ. ரபீக் அஹ்மத், ஆம்பூர்.

இவ்வினாவுக்கு விடை சொல்வது எளிதன்று. ஒவ்வொருவர் கருத்தும் வேறுபடும். இன்றைய அமெரிக்கக் கவிஞர்களில் முன்னணியில் விளங்குபவர்கள் ஆர்ச்சிபால்டு மெக்லீஷ், வில்லியம் கார்லோஸ் வில்லியம்ஸ், கான்ராடு ஐக்கன், ராபின்ஸன் ஜெபர்ஸ், ராபர்ட் லாவெல் ஆகியோராவர்.

இளங்கவிஞர்களில் முன்னணியில் விளங்குபவர்கள் எலிஸபெத் பிஷப், ரண்டால் ஜாரெல், ரிச்சர்டு வில்பர், கென்னத் பாட்சன், மூரியல் ரியூகேய்ஸர், கார்ள் ஷப்பிரோ, டெல்மோர் ஷ்வார்ட்ஸ், ரிச்சர்டு எபர்ஹார்ட் என்பவர்களாவர்.

1963-ல் காலஞ்சென்ற ராபர்ட் ஃபிராஸ்ட் போன்று அமெரிக்க மக்களின் அன்பைப் பெற்ற கவிஞர் வேறு இல்லை. அவர் தமது இறுதிக் காலத்தில் பல ஆண்டுகள் மத்திய சட்டமன்ற நூலகத்திற்குக் கவிதை ஆலோசகராக இருந்தார்; இதனால் இவரை அமெரிக்காவின் ஆஸ்தான கவிஞர் என்னலாம். (அமெரிக்காவில் ஆஸ்தான கவிஞர் என்ற பட்டம், பதவி இல்லை). அமெரிக்க கவிதை உலகில் "முதுபெருமகன்" என்று அவரை யாவரும் போற்றினர். அவர் காலஞ்சென்றபோது ஜனாதிபதி கென்னடி "அமெரிக்கப் பண்பில் ஓரிடம் அவர் மரணத்தால் வெறிச்சோடிக் கிடக்கிறது" என்று உளமுருகிக் கூறினர்.

*அமெரிக்காவில் சராசரியாக ஆலைத் தொழிலாளி ஒருவர் ஊதியம் எவ்வளவு?*

*—எம். எஸ். மித்ரா,*
*சோலாப்பூர்,*
*மகாராஷ்டிரம்.*

1964–ம் ஆண்டில் சராசரியாக ஆலைத் தொழிலாளிக்கு வாரத்துக்கு 100 டாலர் (ரூ. 475) கிடைத்தது. இது 1948–ம் ஆண்டில் சராசரி ஆலைத் தொழிலாளிக்குக் கிடைத்த ஊதியத்தைப்போல் இருமடங்குக்கும் மேலாகும். விலைவாசிகளும ஏறியிருக்கும் அல்லவா என்று கேட்கலாம்; எனினும் 1948–ம் ஆண்டுக் கூலியைக் கொண்டு வாங்கக் கூடியதைக் காட்டிலும் 1964–ம் ஆண்டுக் கூலி நூற்றுக்கு 50 பங்கு அதிகமாகவே வாங்கக் கூடியதாக இருந்தது. எனவே விலையுயர்வைக் காட்டிலும் ஊதிய உயர்வு அதிகம். அது மட்டுமல்ல; 1948–க்குப் பிறகு ஆலைத் தொழிலாளிக்கு விடுமுறை நாட்களும், ஊதியத்துடன் கூடிய விடுமுறைக் காலமும், வைத்திய வசதிகளும், ஓய்வுகாலப் பென்ஷன் தொகையும் அதிகமதிகமாகக் கிடைத்து வருகின்றன.

1948–க்குப் பிறகு அமெரிக்கத் தொழிலாளர் எண்ணிக்கை 1.3 கோடி அதிகமாகியுள்ளது; ஆக இன்று மொத்தம 7·4 கோடி அமெரிக்கத் தொழிலாளர் உள்ளனர். இதற்கிடையில் கடின உழைப்பைத் தவிர்க்கும் பெரிய பெரிய தொழில் நுட்ப முன்னேற்றங்களும் ஏற்பட்டுள்ளன.

*—அமெரிக்கன் ரிப்போர்டர்.*


**" ஆரம்பக்கல்வி "**
**ஆபீஸ்.**

**94–95, புதுத்தெரு,**
**மண்ணடி, சென்னை-1.**

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. **2-50**

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. **2-00**

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. **2-00**

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. **1-00**

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. **2-00**

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. **2-00**
தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு
Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு :

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!" என்னும் பழமொழிக்கு உயிர் தரும் கட்டுரைக் கருவூலம் இது............

# ஜலதோஷம் இகமேல்

[டாக்டர் ஸி. ஆர். ஆண்டர்ஸன்]

எங்கு பார்த்தாலும், மக்கள் பல அனுவசியமான நோய்களால் வருந்தி வாடுவதைக் காண்கிறோம். சில நோய்கள் தவிர்க்க முடியாதவை. ஆனால் பெரும்பாலானவற்றைத் தடுக்க முடியும். நாம் சிறிது அறிவுடனும் எச்சரிக்கையுடனும் நடந்துகொண்டால், அவை வாராமலும், பிறருக்குப் பரவாமலும் காத்துக் கொள்ளலாம். இத்தகைய பிணிகளுள் சலதோஷம் ஒன்று. இது உலகெங்கும் சர்வ சாதாரணமாகக் காணக்கூடிய ஒரு நோய். பலருக்கு இது அடிக்கடி உண்டாகும். எப்பொழுதும் சளியும் கையுமாக இருப்பார்கள்! இந்த மூக்குச்சளி மூர்த்திகள் உண்மையாக நீவ முயனுவார்களானால், அவர்கள் அதனின்று விடுதலை அடையலாம்!

நான் இப்போது சொல்லப் போவதை ஒருவேளை நீங்கள் நம்பமாட்டீர்கள்: ஆனாலும் அது உண்மை. சலதோஷம என்பது என்ன, அது எப்படி உண்டாகிறது என்று மருத்துவர்களாகிய நாங்களோ இன்னும் திட்டமாக அறியோம். ஒரு செய்தி மட்டும் வெளிப்படையாகக் காணக் கிடக்கிறது. அது என்னவெனில், சலதோஷம் மிகவும் தொற்றும் தன்மை உடையது என்பது. ஒரு குடும்பத்திலே ஓர் ஆளுக்குச் சலதோஷம் பிடித்தால், அது பெரும்பாலும் வீட்டில் உள்ள மற்றவர்களையும் தாவிப் பிடிக்கும். அப்புறம் அவர்களிடமிருந்து அண்டை வீட்டுக்குப் பரவலாம்.

இந் நோயைப் பற்றிய இன்னொரு செய்தியும் எச்சரிக்கைக்கு உரியது. அது வேறு பல பிணிகளுக்கு வழி திறந்துவிடக் கூடியது என்பதே அச்செய்தி. முக்கியமாக இன்புளுயன்சா, நிமோனியா, க்ஷயரோகம், உள்நாக்கு அழற்சி, மூச்சுக்குழல் அழற்சி, குரல்வளை வீக்கம் ஆகிய பிணிகள் இதைப் பின்தொடர்ந்து வரலாம். ஓர் ஆளுக்கு அடிக்கடி சலதோஷம் பிடிக்கிறது என்று வைத்துக கொள்வோம். ஒவ்வொரு தடவையும் அது விரைவில் குணமாகிவிடுகிறது. ஆனால் கடைசியில் பிடிப்பது பல மாதங்களுக்குமேல் நீடிக்கிறது. அவர் அதைக் குறித்து அவ்வளவாகக் கவலைப்படவில்லை. ஏதோ மார்சளி போலும், இன்று சுகமாகாவிட்டால், நாளை ஆகிவிடும் என்று மெத்தனவாக இருக்கிறார். ஒரு நாள் அவர் உடம்பைச் சோதித்த மருத்துவர் ஒரு

வர் அவருக்கு எலும்புருக்கி நோய் உண்டாகியிருப்பதாகச் சொல்கிறார். ஆனால் இதற்குள்ளாக அது பெரும்பாலும் முதிர்ந்து போயிருக்கும். எவ்வளவு இரங்கத்தக்க நிலைமை, பாருங்கள்! சலதோஷத்தால் எவருமே சாவதில்லை எனினும், அதைப் பின்பற்றி வரும் க்ஷயம், கபவாதசுரம் முதலிய நோய்கள் மரணத்தை உண்டுபண்ணலாம். ஆதலால் அதை ஒருகாலும் சிறிதாய் எண்ணலாகாது.

நீங்கள் இனி எப்போதாகிலும் ஒரு பிரசங்கக் கூட்டத்திற்குப் போனால், அங்கே யார் பேசுகிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்பதைக் கவனிப்பதோடு கூட, யாரெல்லாம் இருமுகிறார்கள் என்றும், தும்முகிறார்கள் என்றும் அவர்களில் எத்தனை பேர் இருமும் போது, அல்லது தும்மும் போது, ஒரு கைக்குட்டையினால் வாயை மூடிக்கொள்கிறார்கள் என்றும் கவனித்துப் பாருங்கள் ஒரு சிலரே வாயை மூடுவார்கள் அப்படி மூடாத பேர்கள் பெரிய மனிதர்களாக இருக்கலாம், நல்லோராக இருக்கலாம், ஆயினும் சமுதாயத்தின் ஆரோக்கிய நிலையைப் பற்றிய வரையில், அவர்கள் சமூக விரோதிகளே ஆவர்! பிணி பரப்புவார்களே ஆவர்! தம் குல வெட்டிகளே ஆவர்! அவர்கள் இருமும்போது, அவர்கள் கொண்ட வாயினின்று வெளித்தள்ளப்படும் கோழைத் திவலைகளில் ஆயிரம், பல்லாயிரமான சலதோஷக் கிருமிகளும் இருக்கும். அவை கலந்த காற்றை மற்றவர்கள் சுவாசித்தால், அவர்களுக்கும் இந்த நோய்கள் உண்டாகலாம். வெறும் கண்ணால் கிருமிகளைக் காண முடியாது. நுண்ணோக்காடியால் மட்டும் பார்க்கலாம். அவை அத்தனை சிறியவை. காற்றில் அவை நிறைந்திருக்கும். ஆகையால் அவை பெரும்பாலும் நம் மூக்கு வழியாகவும் வாய் வழியாகவும் உடலில் நுழைகின்றன.

காற்றிலே இரண்டு முக்கியமான வாயுக்கள் இருக்கின்றன.

---

### ஜீவகாருண்யம்

ஜீவகாருண்யத்தின் முக்கிய லக்ஷியமாவது எது? எனில்— எந்த வகையிலும் ஆதரவில்லாத ஏழைகளுக்குண்டாகின்ற பசியென்கிற பெரிய ஆபத்தை நிவர்த்தி செய்கின்றதே முக்கிய லக்ஷியமென்றறிய வேண்டும்.

பசியின் கொடுமை — உலக முழுவதும் ஆளுகின்ற சக்கரவர்த்தியாகிய அரசனுக்கும்— உலக முழுவதும் ஒரு நிமிஷத்தில் வெல்லத்தக்க சுத்த வீரனுக்கும்—மூன்று ஆசைகளையும் ஒழித்து உண்மையறிந்து பிரமானுபவத்தைப் பெற்ற சீவன் முத்தர்களுக்கும் பசி நேரிட்டபோது மனமிளைத்தும் — வலி குலைந்தும் — அனுபவம் தடைப்பட்டும் — வருந்துகின்றார்களென்றால் எந்த வகையிலும் ஆதாரமில்லாத ஏழைகளுக்குப் பசி நேரிட்டால் என்ன பாடு படார்கள்?

—இராமலிங்க அடிகள்.

ஒன்று பிராணவாயு. மற்றது உப்பு வாயு. இவற்றில் பின் சொல்லப்பட்டது மரம், செடி கொடிகளின் வளர்ச்சிக்கு அவசிய மானது. ஆனால் பிராணவாயு இன்றி எவ்வுயிரும் வாழ முடியாது. நாம் பிறந்த நிமிடத்தி லிருந்து கடைசி மூச்சு விடும் வரையிலும் பிராணவாயு வினாலேயே உயிர் பிழைக்கிறோம். எந்தக் காரணத்தினலாவது தொண்டையில் அடைப்பு ஏற்பட்டதின் விளைவாக, நுரையீரல்களுக்குள்ளே காற்று நுழைய முடியாவிட்டால், உடல் விரைவில் நீல நிறமாக, மரணம் விளையும். முக்கியமாக, டிப்தீரியா நோயிலே சில சமயம் தொண்டைச் சதை மிகவும் வீங்கிப் போய், மூச்சுக் குழலை அடைத்து விடுதல் உண்டு. பழங்காலத்திலே இலட்சக் கணக்கான மக்கள் இவ்வாறு மூச்சுவிட முடியாமல் மரித்தார்கள். ஆனால் இக்காலத்திலே இதற்கு ஒரு புது அறுவை முறை ஏற்பட்டிருக்கிறது. ஒரு கத்தியாலே தொண்டையில் வெட்டி, ஒரு துளை பண்ணி, அது வழியாக ஓர் உலோகக் குழாயை உள்ளே செலுத்தி, மூச்சுக் குழலோடு பொருத்திவிடுவார்கள். நோயாளி இந்தக் குழாய் வழியாகச் சுவாசிக்க முடியும்; மூக்கினல் அல்ல. அடைப்பு நோய் குணமாகும் வரையிலும் இப்படி மூச்சு விடலாம். பிறகு குழாயை எடுத்து விட்டு, வெட்டுவாயைத் தைத்து விடுவார்கள்.

ஆனல் டிப்தீரியா போன்ற தொண்டைக் கட்டு நோய்களில் மட்டும் அன்றி, க்ஷயரோகம், நிமோனியா முதலியவைகளிலும் சில சமயம் உடலுக்கு இயற்கை அளவு பிராணவாயு கிடைக்காமல் தடைப்படுதல் உண்டு. நமது நுரையீரல்கள், கடற்பஞ்சு போல, பல்லாயிரக் கணக்கான நுண்ணிய காற்று அறைகளால் ஆனவை என்பதும், நாம் சுவாசிக்கும் காற்று மூச்சுக் குழல் வழியாக இந்த உள் அறைகளையே அடைகின்றன என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். இந்த அறைகளைச் சுற்றிலும் எப்பொழுதும் கெட்ட இரத்தம் வந்து சுற்றிக்கொண்டிருக்கும். அப்படிச் சுற்றும்பொழுது, அது தன்னிடத்தில் உள்ள கரியமில வாயுவை அக் கண்ணறைகளில் விட்டுவிட்டு, அங்கு வரும் பிராணவாயுவை எடுத்துக்கொள்கிறது. இரத்தம் தூய்மையாகும் முறை இதுவேயாகும். நாம் மேலே சொன்னவாறு, க்ஷயரோகம், நிமோனியா முதலிய நோய்களில் சில சமயம் இந்தக் காற்று அறைகள் கிருமிகளால் நிறைந்துவிட, அவற்றில் மூச்சுக் காற்று தாராளமாக நுழைய முடியாமல் போகிறது. பொதுவாக, நமது மூக்கு வழியாகவும், வாய் வழியாகவுமே கிருமிகள் நுரையீரல்களுக்குள் புகுகின்றன என்பதை நாம் மறந்துவிடல் ஆகாது. நமது உணவு மூலமாகவும் சிறு பான்மை தொற்றலாம். நம் கைவிரல்களை வாய்க்குள்ளே விடுதலும் ஒரு சாதாரண காரணம். அவற்றில் கிருமிகள் எப்பொழு

தும் ஒட்டிக்கொண்டிருக்கலாம். ஒருபோதும் தேவையின்றி உதட்டிலே, வாயிலே விரல்களை வைக்கவே கூடாது. நமது குழந்தைகளும் வைப்பதற்கு விடக்கூடாது. அது ஒரு கெட்ட பழக்கம். கெடுதலான பழக்கம் என்பதைத் தொட்டிலிலிருந்தே அவர்களுக்குக் கற்பித்தல் வேண்டும்.

ஒரு நாளும் பிறர் கைக்குட்டைகளை உபயோகிக்கக் கூடாது. சில பெற்றோர் தங்கள் கைக்குட்டையால் தங்கள் குழந்தைகளின் முகத்தைத் துடைப்பார்கள், அல்லது அவர்கள் மூக்குச்சளியைச் சிந்துவார்கள். பரம முட்டாள்தனமான செய்கை இது! இதனால் எத்தனையோ மதலைகளுக்குச் சலதோஷம் முதலிய நோய்கள் உண்டாகியிருக்கின்றன! அழுக்குக் கைத்துண்டுகளைக் குழந்தைகள் எடுத்து விளையாடக்கூடிய இடங்களில் வைக்கக் கூடாது. அவற்றை முதலில் சோப்பினாலும் வெந்நீரினாலும் கழுவிவிட்டு, பிறகு கொதிநீரில் இட்டுக் காய்ச்ச வேண்டும். அப்போதுதான் அவற்றில் உள்ள கிருமிகள் அனைத்தும் சாகும்.

இருமல் உள்ள மனிதன் ஆபத்தான மனிதன். அவர் யாராயினும், அவர் இருமல் எக்காரணத்தால் உண்டாயினும், கெடுதலை உடையவரே. அவர் இருமலினாலும், அவர் துப்பும் கோழையினாலும் நோய்க் கிருமிகள் பரவுவதைப்போல வேறெந்த வகையினாலும் பரவுவதில்லை. ஓர் ஆளுக்குக் கடுமையான இருமல் இருந்தால், அவர் கூடிய மட்டும் மற்றவர்களோடு புழங்கக்கூடாது. இருமித் திரிவது பாவம் அவர் இருக்கவேண்டிய இடம் அவர் படுக்கையேயாகும். அதையும் விடப் பாதுகாப்பான இடம் ஆஸ்பத்திரி. அவர் இருமல் நிற்கும் வரையிலும், அவர் தொண்டையும் நெஞ்சும் குணமாகும் வரையிலும், அவர் மருத்துவமனையிலே இருக்க வேண்டும். அதற்கு அதிக நாள் செல்லலாம். ஆனாலும் இருமித் திரிந்து, ஊரைக் கெடுப்பதைவிட அது எவ்வளவோ மேல்!

சலதோஷத்திற்குப் படுக்கை ஓய்வைக் காட்டிலும் நல்ல மருந்து இல்லை. சலதோஷத்தில் உண்டாகும் தொண்டை நோயைத் தணிப்பதற்குச் சிற்சில மருந்துகள் உதவும். வெந்நீரில் குளிக்கலாம். அத்தோடு, ஆரஞ்சுப் பழச் சாறுவது எலுமிச்சம் பழச் சாறுவது பருக வேண்டும். அவற்றில் இருக்கும் வைட்டமின் ஸி சலதோஷத்திற்கு நல்லது. உணவைக் குறைத்துக்கொள்ள வேண்டும்; அதுவும் எளிதில் சீரணமாகும் பொருட்களையே சாப்பிடலாம். ஆனால் இவை எல்லாவற்றையும் விட அதிகப் பயனுள்ள முறை சலதோஷத்தைப் படுக்க வைப்பதேயாகும்.

—" நல்வழி "

# வள்ளலார்

# திருவுள்ளம்

கடவுள் எல்லா உயிர்களுக்கும் பொதுவான தாயும் தந்தையும் ஆனவர்; அருள் வடிவாக விளங்குபவர்; உலக வாழ்க்கை ஒழுங்காக நடைபெறும் பொருட்டு, ஒழுங்கான விதிகளின்படி யாவும் நடைபெறுமாறு ஆட்சி புரியும் தலைவர்; உயிர்களை எல்லாம் குழந்தைகள் போல் கருதி யாதொரு வேறுபாடும் இல்லாமல் நலம் செய்பவர்; செல்வர் வறியர், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடுகளைப் பொருட்படுத்தாத அருளாளர் அவர். உண்மை அவரே; அறிவு அவரே; அன்பும் இன்பமும் அவரே. இவ்வாறெல்லாம் திரும்பத் திரும்ப உணர்த்தி உலகை உய்விக்க வந்த ஞானியர் திருக்கூட்டத்தைச் சார்ந்தவர் அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளார்.

இந்தத் தூய கருத்தோடு ஒத்து வராத கடவுட் கருத்தும் உள்ளது. அந்தக் கருத்தின்படி, கடவுள் ஒரு பெரிய உலக ஜமீன்தாரர்; அவர்க்கு வேண்டியவர்கள் உண்டு; வேண்டாதவர்கள் உண்டு அவரை அடிக்கடி தற்புகழ்ச்சியாய்ப் போற்றிச் சில தந்திர மந்திரங்களைக் கையாள்கின்றவர்களுக்கு மட்டுமே அவர் வேண்டியவர், அந்த அன்பர்களுக்கு மட்டுமே அவர் உதவிகள் செய்வார்; அவர்களின் வேண்டுகோளுக்கு மட்டுமே செவி சாய்ப்பார்; மற்றவர்களை அந்தக் கடவுள் புறக்கணிப்பார். வேண்டியவர்களுக்கு நன்மை பல செய்து, வேண்டாதவர்களுக்குத் தீமையும் செய்வார்; அதாவது ஆடம்பரப் பூசையும் அருச்சனையும் திருவிழாவும் செய்வோர்க்கு நன்மை செய்து, அவைகள் செய்யாதவர்க்குத் தீமை செய்வார்.

இன்னும் சிலர் கடவுளைத் தங்கள் விருப்பு வெறுப்புக்குத் தக்கபடி ஆடுகின்றவராகவும், பொருள் முதலியவை கொடுத்தால் மனத்தை மாற்றிக் கொள்ளக் கூடியவராகவும், நடுநிலைமை அற்றவராகவும் கற்பனை செய்து தம் தன்னல வாழ்க்கைக்குத் துணை தேடுகின்றனர். தம்முடைய வம்பு வழக்குகளுக்கும் ஆசைகளுக்கும் துணையாகக் கடவுளை வேண்டிக் கொண்டு தம் எதிரிகளுக்குத் தீமை செய்யும்படியாகவும் கேட்டுக் கொள்கின்றனர். தம் பூசை பிரார்த்தனைகளால் அவ்வாறு கடவுள் செய்ததாகவும் நம்புகின்றனர். ஒழுங்காக நடைபெறும் உலகப் போக்கை அடிக்கடி மாற்றி ஒழுங்கு கெடுத்தாவது அற்புதங்கள் நிகழச் செய்யும் ஒருவராகக் கடவுளை மதிக்கின்றனர். அந்த அற்புதங்களைத் தமக்கு நன்மையாகத் திருப்பிக் கொள்ள முடியும் என்று நம்பி, அந்தத் தன்னலத்தாலேயே கடவுளுக்குப் பூசை திருவிழா முதலியன செய்கின்றனர்.

கடவுள் தன்மையை உணர்ந்த சான்றோர்கள் கடவுளைப் பற்றிக்

கூறிய கருத்துக்கள் உலக ஜமீன்தாராகவோ செப்படி வித்தைக்காரராகவோ காட்டவில்லை. அருள் வடிவான உலக முதல்வனாகவே கடவுளைக் காட்டுகின்றனர். ஆழ்வார், நாயன்மார் பாடிய பாடல்கள் அவ்வாறே அறிவிக்கின்றன. காந்தியடிகள் முதலான சான்றோர்களின் அறவுரைகளும் அவ்வாறே எடுத்துரைக்கின்றன.

வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளின் அருட்பாக்கள் இந்தத் தூய கருத்தையே வலியுறுத்துகின்றன. மற்றக் கருத்துக்கள் உண்மை என்னும் அடிப்படை இல்லாமல் தன்னலத்தோடு கற்பனை செய்துகொள்ளப் பட்டவை. ஆகையால், ஒரு காலத்தில் ஏமாற்றத்தைத் தரக் கூடும். அவ்வாறு ஏமாற்றம் ஏற்படும் காலத்தில், அவற்றை நம்பியவர்கள், அந்த நம்பிக்கையே தளர்ந்து நாத்திக எல்லையை நாடவும் கூடும். வள்ளலாரின் அருட்பாக்கள் உணர்த்தும் கடவுட் கருத்துக்கள் பொதுநலம் நாடுவனவாய், உண்மையை உணர்ந்து கூறுவன; ஆகையால், என்றும் போற்றத் தக்க ஆத்திகத்தை உணர்த்த வல்லவை. ஆகையால் குறிப்பிட்ட காலத்திற்கோ நாட்டிற்கோ சமயத்திற்கோ என்று குறுகி நிற்காமல், எவரும் என்றும் போற்றத் தக்க மாறாத உண்மையாய் விளங்குபவை.

ஆறாவது திருமுறையில் உள்ள பிள்ளைச் சிறு விண்ணப்பம் என்ற சிறுபகுதியை எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

எனக்குப் பேசிய தந்தையும் தாயும்
பொடித்திரு மேனியம்பலத் தாடும்
புனித நீ ஆதலால்—

என்று கடவுளைத் தாயும் தந்தையுமாகவே காண்கிறார் வள்ளலார். வாழ்க்கையின் அடிப்படையைக் கடவுளின் திருவருளால் அமைந்தது என்றும், வாழ்க்கையின் எல்லா நலமும் கடவுள் அமைத்தவையே என்றும் தெளிந்த தெளிவு உடையவர் அவர். ஆகையால், தமக்கெனச் செயல் ஒன்று இல்லாமல், எல்லாம் அவன் வகுத்த வழியே

டாக்டர் மு. வரதராசனார்

என்று வாழ விரும்பினார். உண்ணும் உணவும் கடவுள் தந்ததே என்று, பற்றின்றி உண்பதாகக் கூறியுள்ளார்.

இன்சுவை உணவு பலபல எனக்கிங்கு
எந்தைநீ கொடுப்பிக்கச் சிறியேன்
நின்சுவை உணவென் றுண்கின்றேன் இன்னும்
நீதரு வித்திடின் அதுநின்
தன்சுதந் தரமிங் கெனக்கதில் இறையும்
சம்மதம் இல்லைநான் தானே
என்சுதந் தரத்தில் தேடுவே னல்லேன்
தேடிய துப்பிலை யீண்டே.

இளமையிலேயே வள்ளலார் உள்ளம், கடவுளின் அருளாட்

சியில் ஈடுபாடு கொண்ட காரணத்தால், பணம் தேடல் முதலியவற்றில் சிறிதும் பற்று இல்லாதவரானார். காசிமேல ஆசை செய்திலேன், இந்த நாளில் மட்டும் அல்லாமல் அறிவில்லாத சிறு பருவத்திலும் அந்த ஆசை கொண்டதில்லை என்று கூறியுள்ளார்.

பணத்திலே சிறிதும் ஆசையொன்
றிலேநான்
படைத்தவப் பணங்களைப்
பலகால்
கிணற்றிலே எறிந்தேன் குளத்தி
லும் எறிந்தேன்
கேணியில் எறிந்தனன் எந்தாய்
குணத்திலே நீதான் கொடுக்கின்ற
பொருளை
எதிகலேன் கொடுக்கிறேன்
பிறர்க்கே
கணத்திலே எல்லாம் காட்டுநின்
அருளைக்
கண்டனன் இனிச்சொல்வ
தென்னே.

என்ற பாடல் வள்ளலாரின் திருவுளத்தை—பணம் முதலிய பற்றித் தீண்டாத துறவுள்ளத்தைக்—காட்டுகிறது.

வாழ்க்கைக்கு இன்றியமையாத சில ஆசைகள் உண்டு. உடம்பை நன்றாக வைத்துக்கொள்ள வேண்டும், உடம்பு நன்றாக இருப்பதற்காகப் பசி வேண்டும், பசிக்கு ஏற்ற உணவு வேண்டும், சதைப் பிடிப்பு வேண்டும், உடம்பு இளைக்காமல் இருக்க வேண்டும் என்றெல்லாம் எல்லோரும் ஆசைப்படுவது இயற்கை. துறவிகளும் தம் துறவு நெறியில் யோகம் முதலியவற்றிற்காக இவ்வாசைகள் கொண்டு உடம்பைக் காப்பாற்றுவது உண்டு. உணவிலே ஆசை இல்லாதவர்களும், உடம்பை உரமாகக் காப்பாற்றுவதில் மட்டுமாவது ஆசை உடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இந்த ஆசையும் தமக்கு இல்லை என்று வள்ளலாரின் பாடல் தெரிவிக்கிறது.

கிளைத்தவிவ் வுடம்பில் ஆசை
யெள்ளளவும்
கிளைத்திலேன் பசியற உணவு
திளைத்திடுந் தோறும் வெறுப்
பொடும் உண்டேன்
இன்றுமே வெறுப்பினுண்
கின்றேன்
திளைத்திடும் முடையூன் உடம்
பொரு சிறிதும்
தடித்திட நினைத்திலேன்
இன்றும்
இளைத்திட விழைகின் றேனிது
நான்தான்
இயம்பலென் நீயறிந் ததுவே.

இவ்வாறு எவ்வகை ஆசையும் அற்ற உள்ளத்தோடு வள்ளலார் நடத்திய வாழ்க்கை எதற்காக என்று அறியத் தோன்றும். சரியை, கிரியை யோகம், ஞானம் என்னும் படிகளில் உயர்ந்து நிற்பதற்காகவா? அதுவும் இல்லை என்றார் வள்ளலார். இவ்வாறு ஆசைகளைத் துறப்பதன் வாயிலாக, உயர்ந்த நிலையோ, சிறந்த புகழோ பெறுவதற்காகவா? அதுவும் இல்லையாம். கடைசியாக, கீர்த்தி பெறுவதே நோக்கமா? அதுவும் இல்லையாம்.

முத்திபெற்றிடவும்
உரியதோர் இச்சை எனக்கிலை
என்றன்
உள்ளம்நீ அறிந்ததே எந்தாய்

என்று தெளிவாகக் கூறியுள்ளார்.

இறக்கவும் ஆசை இல்லையிப்
படிநான்
இருக்கவும் ஆசையின்
றினிநான்
பிறக்கவும் ஆசை இலையுல
கெல்லாம்
பெரியவர் பெரியவர் எனவே
சிறக்கவும் ஆசை இலைசித்
திரங்கள்
செய்யவும் ஆசையொன்றில்லை
துறக்கவும் ஆசை யிலைதுயர்
அடைந்து
தூங்கவும் ஆசையொன்
றிலையே

என்று தம் உளப்பான்மையை அழகிய எளிய பாடலாகப் பாடியுள்ளார்.

இவ்வாறு பதினைந்து இனிய பாடல்களால் தம் துறவுள்ளத்தை —தனக்கென வாழாத் தூய நோக்கத்தைப் பாடியுள்ள வள்ளலார், அடுத்து எட்டுப் பாடல்களில் தமக்கு உள்ள இச்சை இன்னது என்று விளக்கியுள்ளார்.

கடவுள் தமக்குத் தாயும் தந்தையுமாக இருப்பது போலவே, எல்லா உயிர்க்கும் அவ்வாறு விளங்கி அருள் செய்கின்றார் என்று தெளிவு பெற்ற காரணத்தால், அதனை என்றும் மறக்காமல், கடவுட் குடும்பத்தில், கடவுளாட்சியில் கலந்து ஒன்றிக் கடவுளின் அருட் புகழே பாடி வாழ வேண்டும் என்று விரும்பியுள்ளார்; கடவுட் குடும்பமாகிய இந்தப் பரந்த உலகில் உள்ள உயிர்களுக்கு வரும் துன்பங்களைத் தீர்க்க ஆசை உண்டு என்றும், அதற்காகவே எப்போதும் பாடுபடத் தம் உள்ளம் விரும்புகிறது என்றும் பாடியுள்ளார்.

சற்சபைக் குரியார் தம்மொடுங்
கூடித்
தனித்தபே ரன்புமெய் யறிவும்
நற்சபைக் குரிய ஒழுக்கமும்
அழியா
நல்லமெய் வாழ்க்கையும்
பெற்றே
சிற்சபை நடமும் பொற்சபை
நடமும்
தினந்தொறும் பாடிநின் றாடித்
தெற்சபை உலகத் துயிர்க்கெலாம்
இன்பம்
செய்வதென் இச்சையாம் எந்
தாய்.
எவ்வுயிர்த் திரளும் என் உயிர்
எனவே
எண்ணிநல் இன்புறச் செய
வும்
அவ்வுயிர் களுக்கு வருமிடை
யூற்றை
அகற்றியே அச்சநீக் கிடவும்
செவ்வையுற் றனது திருப்புகழ்
பாடிச்
சிவ சிவா என்றுகூத் தாடி
ஓவ்வுறு களிப்பால் அழிவுறாத்
திங்கே
ஓங்கவும் இச்சைகாண் எந்தாய்;

உலகத்து உயிர்கள் எல்லாம் பெரிய அருட்குடும்பமாய் வாழ்

தல் வேண்டும் என்று விரும்பிய காரணத்தால், உயிர்கள் வருந்தும் வருத்தத்தைக் காணமுடியவில்லையே என்று வாக்தி முறையிட்டுள்ளார். அந்த உயிர்களின் துன்பத்தைத் தீர்க்க நல்ல வரம் தந்தருள வேண்டும் என்று வேண்டியுள்ளார். இவ்வாறு திரும்பத் திரும்ப வேண்டிய பிறகு;

உரிநற் றந்தை வள்ளலே
அடியேன்
உரைக்கின்றேன் கேட்டருள்
இதுவே.
ஞானநா டகஞ்செய் தந்தையே
அடியேன்
நவில்கின்றேன் கேட்டருள்
இதுவே.
எல்லைஎன் றெடுத்த தந்தையே
அடியேன்
இசைக்கின்றேன் கேட்கவிம்
மொழியே

என்று மூன்று பாடல்களை முடித்துள்ளார்.

முப்பது பாடல்கள் உள்ள இந்தப் 'பிள்ளைச் சிறு விண்ணப்பம்' ஒன்றே, உலக சமயச சான்றோர்களுள் இராமலிங்க வள்ளலார் ஒருவர் என்ற சிறப்பை விளக்க வல்லதாகும். அருட்பா முழுதும் இத்தகைய தூய திருவுள்ளம் விளங்குகின்றது. எளிய இனிய தமிழில் சமயப் பேருண்மைகளை எடுத்துரைத்து, கடவுளின் மெய்த் தன்மையையும் உயிர்களின் வாழ்க்கைக் கடமையையும் அறிவுறுத்தியுள்ளார் வள்ளலார். அவர் தம் திருவுள்ளம் வெல்க; அருளாட்சி வெல்க.

—ச. ச. ச. மா. மலர்.

---

# சிந்தனைக்கு

4. துறவிகளுக்கு அழகு அறிவு; மனிதர்களுக்கு அழகு புத்தி சாதுர்யம்; பெண்களுக்கு அழகு திருமணம்.

—பர்மியப் பழமொழி.

5. மோசமானவனை ஒதுக்கிவை; ஆனால் அவனை விரோதித்துக் கொள்ளாதே. நல்லவனை நாடு; ஆனால் அவன் சொன்னதற்கெல்லாம் தலையாட்டாதே.

—சீனப்பழமொழி.

6. திடீரென்று காதலிக்கத் தொடங்குபவர்கள் மட்டமான காதலர்கள்; சுலபமாக மாறுபவர்கள் உறுதியான நண்பர்கள் இல்லை.

—சீனப்பழமொழி.

7. நல்லவன் எது உண்மையானது என்பதைத் தெரிந்து கொள்கிறான். கெட்டவன் எது லாபகரமானது என்பதைப் புரிந்து கொள்கிறான்.

—ஜப்பானியப் பழமொழி.



# வள்ளலார் வாழ்க்கை

**வே. கபிலன்**

*19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அவதரித்து 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஜோதியாகிவிட்ட இராமலிங்க அடிகளின் வாழ்க்கைச் சுருக்கம் இது. சுவையுங்கள்; பிறரையும் சுவைக்கச் செய்யுங்கள்.*

## உலகம் உவக்க:

இப் புவனம் தோன்றிய நாள் முதல் எத்தனையோ ஞானிகள் தோன்றி இருக்கிறார்கள். உலக உயிர்கள் பெற்றுத் தீரவேண்டிய நல்லொழுக்கங்களைக் குறித்து உபதேசித்துப் போயுள்ளார்கள். பெற்ற சரீரம் பெற்றுத்தீரவேண்டிய ஆன்ம ஒளிக்கென்று அந்தந்தக் காலத்தில் உதித்த சமயக் குரவரும், ஆழ்வாராதிகளும் தொண்டு புரிந்துள்ளார்கள். அல்லவா? அப்படிப்பட்ட ஞானிகளில் தலைசிறந்து விளங்கியவர் நமது அடிகளார்,

## பிறப்பின் சிறப்பிடம்:

ஆம்; பூவிரியும் சோலையும், பொன் கொழிக்கும் நதியும், நில வளத்தின் மாண்பும் நிரம்பப் பெற்ற சோழ மண்டலமும், அதைச் சார்ந்த தென்னாற்காடு மாவட்டமும் வரலாற்றுப் புகழ் பெற்றதாகும். அங்ஙனம் எல்லாவற்றிலும் கீர்த்தி பெற்றுத் திகழ்ந்த புண்ணிய பூமியின் ஒரு பகுதியாகிய தென்னாற்காடு மாவட்டம் தன்னிகரற்றத் தலங்களில் ஒன்றாகும். இங்குள்ள **தில்லை நடராசர் கோயில்,** சைவ மெய்யன்பர்களுக்கெல்லாம் ஒரு சிறந்த திருவிளக்காகும். இதன் வடமேற்கிலுள்ள **கீழ மருதூர்,** அப்பதிக்கோர் அணிகலனாகும். அப்படிப்பட்ட மருதூரில்தான் **இராமையா பிள்ளை** அவர்கள் வாழ்ந்து வரலானார். சிவபக்தியும் செந்நெறி மாண்பும் பொருந்திய அன்னவர், இல்லறத்தில் பெரிதும் விருப்புற்று வாழ்க்கைக்கு ஒருத்தியைத் துணையாகப் பெற்று வாழத் தொடங்கினார். அவர் விருப்பத்திற்கேற்ப அவ்வம்மையார் நீண்ட காலம் வாழவில்லை......காற்றுப் பட்டு அணையும் விளக்கைப் போலவே அவ்வம்மையார் காலமானார்; அவர் தனிமரமானார். மீண்டும் ஒருத்தியைத் துணையாகப் பெற்றார். ஆனால் அவ்வம்

மையும் இராமையாவை விட்டுப் பிரிந்து சென்றார்.

இப்படி, முறையாக ஐவரை மணந்தும் இறுதியில் துறவிபோலவே விளங்கினார். அதன் பிறகு பொன்னேரிக்கு அடுத்த சின்னகாவணம் ஊரில் பிறந்து தவழ்ந்து வளர்ந்து வந்த பொன்னம்மாளை மணம் புரிந்துகொண்டார். அவ்வம்மையார்,

"தெய்வம் தொழாஅள் கொழுநற்
றொழுதெழுவாள
பெய்யெனப் பெய்யும் மழை"

என்னும் அருள்வாக்குக்கு ஒரு சான்றாக விளங்கினார். அவரும்,

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கு
மிறந்தார்க்கு மில்வாழ்வா
னென்பான் துணை

என்னும் திருவாக்கின்படி நாளும் நடந்தொழுகலானார். இருவரின் நல்லொழுக்கத்திற்கேற்ப சபாபதி, பரசுராமர் என்னும் ஆடவர் இருவரும், உண்ணமுலையம்மை, சுந்தரம்மை என்னும் பெண்டிர் இருவரும் முறையாகப் பிறந்து, தவழ்ந்து வளர்ந்து வரலானார்கள். இவர்களுக்குப் பிறகு, அதாவது, ஒரு பத்தாண்டுகளுக்குப் பிறகு இராமையா பிள்ளையும் பொன்னம்மாளும் முற்பிறவியில் செய்த நல்வினையின் பயனாக அடிகளாரை அருமை மைந்தனாகப் பெற்றெடுத்தனர். ஆம்; அவர்களுக்கு ஐந்தாவது மகனாக அடிகளார் அவதரித்தார்.

## இருளில் ஒளி :

உலக உயிர்கள் உள்ளன்போடு வாழவும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் ஆன்மாக்கள் திருந்தவும், சமரச சன்மார்க்க சங்கத்தை ஸ்தாபிக்கவும், பொய் மொழிகளை நம்பி வாழ்வோரை மெய்யுணர்விற்கு அழைத்து வரவும், சாதிப் பூசலிலிருந்தும் சமயப் பிணக்கிலிருந்தும் மாந்தர் கரையேறவும், 'ஒருமை' மனத்தோடு உலகினுள்ளோர் வாழவும் சுபானு வருஷம், அதாவது, 5-10-1823 ஆம் ஆண்டு புரட்டாசித் திங்கள், ஞாயிற்றுக்கிழமை யன்று அன்பர்க்கு பணிபுரியப் பிறந்தார்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக
அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

என்னும் ஞானவாக்கியத்திற்கேற்ப இறைவடிவோடு அவதரித்த அடிகளார், தமக்கு முன்னே தோன்றிய மூத்தவர்களின் நடுவே 'பிள்ளை விளையாட்டு' காட்டி வளரலானார்.

அடிகளார் பிறந்து ஐந்து மாதம் பூர்த்தி. இராமையா பிள்ளை, குழந்தை உருவிலே இருந்த அடிகளாரைக் கையிலேந்திக் குடும்பத்தோடு தில்லையம்பலத்துக்குச் சென்றார்... தில்லை நடராஜர் தரிசனம் செய்தார்... அச்சமயத்தில் அவர் கையிலிருந்த அடிகளார் திரை தூக்கிக் காண்பிக்கப்பட்ட நடராஜரைக் கண்டதும் கலகலவென நகைத்தார். இக்காட்சியைக் கண்கூடாகக் கண்ட கோயில் தீக்ஷிதர், 'இராமையா! இது குழந்தை யல்ல; தெய்வம்" என்று சிறப்பித்துக் கூறி மருதூருக்கு அவரை அனுப்பி வைத்தார்....

ஆறும் மாதம்...குடும்பப் பொறுப்பை உதறித் தள்ளிவிட்டுக் காலமானார், இராமையா பிள்ளை. அவர் இறந்ததும் அவரால் விட்டுச்செல்லப்பட்ட குடும்பச் சுமையை ஏற்றுக் கொண்டார், சபாபதி பிள்ளை.

### மூத்தவர் நோக்கும் அடிகளார் போக்கும்:

ஒரு குடும்பத்தின் தலைவன் இறப்பானேயானால் அவன் வழித் தோன்றலாகிய மூத்தபிள்ளை, அச்சுமையை ஏற்றுக் கொள்வது நெடுங்காலமாகவே இருந்து வரும் ஒரு வழக்கம். அவ்வழக்கத்துக்கு இலக்காகிய சபாபதி பிள்ளையவர்கள், மேலும் மருதூரில் இருக்க விரும்பாமல், தம்முடைய தாயாரோடும் உடன் பிறந்தார்களோடும் பொன்னேரிக்கு வந்தார்; பாட்டியார் வீட்டில் சில நாட்கள் தங்கி இருந்துவிட்டு அனைவரையும் அழைத்துக் கொண்டு சென்னைக்கு வரலானார்.

அடிகளாரின் அண்ணல் அப்பழுக்கற்ற தமிழறிஞராவார். அக்காலத்தில்கல்வி கேள்விகளில் சிறந்தோங்கிய காஞ்சிபுரம் சபாபதி முதலியாரவர்களிடம் முறையாகத் தமிழ்ப் பாடம் பயின்று, பள்ளி ஆசிரியராகவும், பிரசங்க பூஷணமாகவும் விளங்கி அவற்றின் மூலமாகக் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு அனைவரையும் காப்பாற்றி வரலானார்.

அடிகளாரைப் பள்ளியில் சேர்க்கும் பருவம் வந்தது. தந்தைக்குள்ள கடமையை அவர் அண்ணன் ஏற்றுக்கொண்டிருந்ததால் அடிகளாரைப் பள்ளியில் சேர்த்துப் பாடம் சொல்லிக் கொடுக்கலானார். முருகக்கடவுளிடம் குழந்தைப் பருவத்திலிருந்தே தம் மனத்தை ஒப்படைத்திருந்த அடிகள, படிப்பிலே நாட்டஞ் செலுத்துவது போல பாவனைசெய்து வலானார். அதுகண்ட மூத்தவர், தம்முடைய தம்பியாகிய அடிகளை, தாம் பயின்ற சபாபதி முதலியாரவர்களிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பித்தார். அவரிடமும் அடிகளார் படிக்கவில்லை. சென்னை கந்தர் கோட்டத்துக்குச் செல்வதும், வழிபடுவதும், பாமாலை புனைவதுமாக நாளும் இருந்து வரும் அடிகளார் செயலை, அவரோடு பயிலும் மாணவர்கள் மூலமாகக் கேள்வியுற்ற முதலியார் அதிசயித்து, அடிகளாருக்குப் பாடஞ் சொல்லிக்கொடுக்க அச்சப்பட்டு அவர்போக்குக்கே விட்டுவிட்டார்.

இச்செய்தியைக் கேள்வியுற்ற சபாபதி பிள்ளை வருத்தமுற்றதோடு தம் தம்பியாகிய அடிகளார்மீது ஆத்திரமும் கொள்ளலானார். தம் தம்பியின் செயல் அனைத்தும் பிள்ளை விளையாட்டென்று தப்புக்கணக்குப்போட்டு விட்ட பிள்ளையவர்கள், தமக்கு உப்பளிப்போடவந்த பாப்பாத்தியம்மையை அழைத்து "இனி, இந்த இராமலிங்கத்துக்கு உணவில்லை; உடையில்லை. என்னுடைய எண்ணத்திற்கேற்ப என்று அவன் கல்வியில் ஆர்வம் கொள்கிறானே, அன்றுதான் அவனுக்கு இங்கு எல்லாச்

சிறுகைகளையும் அளிக்கவேண்டும்' என்று உத்தரவிட்டார்.

இதைக் கேட்ட பாப்பாத்தி அம்மை பெரிதும் வருந்தினர். அம்மையார்க்கு அடிகளார் மீது அளவற்ற அன்பு உண்டு. அந்த அன்பை முறியடிக்கத்தக்க விதத்திலே தம் கணவரிடமிருந்து கட்டளை பிறந்ததும் வேதனைப்படலானர். கணவர் கட்டளையை மீறவும் திடமில்லை; அதே சமயத்தில் அவர் சொன்னவிதம் நடக்கவும் மனமில்லை. இவ்விரண்டிற்குமிடையே சிக்கிச் சுழன்ற அம்மையார், தம் கணவர் வீட்டில் இல்லாத மாலை வேளையில் அடிகளாரை வரச் செய்து நாளும் அமுதுபடைத்து வரலானர்.

அடிகளார் கலங்கவில்லை; எல்லாம் குமாரகுருபரன் ஆணையென்று தெளிந்து, பசித்த நேரம் போக எஞ்சிய நேரத்தையெல்லாம் கோயிலுக்குச் செல்வதிலும், சமூகச் சந்தையில் அறியாமையால் நடைபெறும் தீய செயல்களைக் கண்டு கண்ணீர் விடுவதிலும் காலத்தைக் கழித்து வரலானர்.

## திருப்பத்தில் திருப்தி:

ஒருநாள்... இராமையா பிள்ளையின் நினைவு நாள் வந்தது. அந்நினைவுநாளை முன்னிட்டு உற்றார் உறவினர் அனைவரும் வந்திருந்தனர். அவர்களோடு அளவளாவிக் கொண்டிருந்த சபாபதி பிள்ளையவர்கள் தம் இளவலை நினைத்துக் கொண்டார் "இன்று நம் தந்தை இறந்த நாள். நம்மோடு நம் தம்பி இல்லாமல் போனானே!" என்று உள்ளூர எண்ணிக் கலங்கினர். அவரது இந்த ஆழம் மிகுந்த கலக்கத்தை ஓடி வந்த பகற்பொழுது மாற்றவே வந்திருந்தோரனைவருக்கும் அமுது படைத்துவிட்டு, இறுதியில், அரைகுறை மனத்தோடு தாமும் உணவருந்தி முடித்தார். ஆனல் அவரது துணைவியாரான பாப்பாத்தியம்மையார் மட்டும் உணவருந்தாமல் அடிகளாருக்காக காத்துக்கொண்டிருந்தார்.

வழக்கம்போல் அடிகளார் வந்தார்; அடிகளாரைக் கண்ட அம்மையார் பேரானந்தம் பெற்று, அவரை வரவேற்று, பழைய சாதத்துக்கு ஒப்பாகக் கிடந்த ஆறிய சோற்றை அடிகளாருக்குப் படைத்துக்கொண்டே கண்ணீர்வடிக்கலானர். கண்ணீர் கண்ட அடிகளார் நெஞ்சம் கலங்கிவிட்டது. வாடியபயிரைக் கண்டபோதெல்லாம் கலங்கிய அந்த நெஞ்சம் அண்ணியின் கண்ணீருக்குரிய காரணத்தை அறியத் துடித்தது. "அண்ணி! ஏன் கண்ணீர் வடிக்கிறீர்கள்? இந்தப் பாவிக்கு அமுதுபடைப்பதை அண்ணன் உணர்ந்து ஏதேனும் கடிந்து கொண்டாரா! ஐயகோ!" என்று கதறியபோது குறுக்கிட்ட அண்ணியார், "அப்படியெல்லாம் ஏதும் நிகழ்ந்துவிடவில்லை. இன்று உங்கள் தந்தையார் இறந்த தினம். உற்றார் உறவினர் அனைவரும் வந்திருந்து விருந்துண்டு சென்றனர். ஆனல் தாங்கள் மட்டும் வழக்கம்போலவே ஆறிய

சோற்றை அஞ்சிய நிலையில் உண்ணவேண்டியதாக இருக்கிறது. இதை நினைக்கும்போது நான் அழாமல் என்ன செய்யமுடியும், ஆகவே எனக்காகவாவது தாங்கள் தங்கள் அண்ணனின் சொற்படி நடப்பதாக உறுதி தந்து வீட்டோடு ஒன்றியிருக்க வேண்டும்” என்று அன்புக் கட்டளை பணித்தார்.

‘அன்பெனும் பிடிக்குள் அகப்படும மலை’ யைக் கண்ட அடிகளார், “அண்ணி உருவில் விளங்கும் என் அன்னையே! உங்கள் அன்பைப் புறக்கணிக்கும் சக்தி எனக்கில்லை. ஆகவே சம்மதிக்கிறேன். அதோடு, நான் படிக்கும் பொருட்டு ஓர் தனியறை தேவை!’ என்று விண்ணப்பித்துக்கொண்டார். அதற்கு அவ்வம்மையார் உடன்பட்டு தம்கணவரின் ஒப்புதலோடு அவர் விரும்பியவாறே தனியறை வழங்கினார்.

அன்று முதல் அடிகளார் வீட்டில் தங்கலானார். தமக்கென்று ஒதுக்கித் தரப்பட்ட அறையில் கண்ணாடியைப் பொருத்தி, அதன் முன்னே நின்று, தம்மையே தாம் கண்டு வணங்கலானார். அகமெனும் கோயிலுக்குள் ஆனந்த பரிபூரணமாய் விளங்கும் அம்பலவாணனைத் தொழுதுவரலானார். இதை மறைவிலிருந்து நாளும் கண்டு வந்த பாப்பாத்தியம்மை அடிகளின் புதுவழியைக் கண்டு வியப்பில் திளைத்தனர்......எப்படியோ, மூத்தவர் மகிழ அடிகளுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

## இளவலல்ல, இறைவன்:

புராணச் சொற்பொழிவு புரிந்து குடும்பத்தை ஓரளவாறு நகர்த்திவரும் சபாபதி பிள்ளைக்கு, தருமமிகு சென்னையின் ஒரு பகுதியாக விளங்கிவரும் முத்தியாலுப் பேட்டையில் சோமு செட்டியார் இல்லத்தில், ‘திருஞான சம்பந்தர் சரிதை!’ சொல்லும் பேறு கிடைத்தது. அதைச் சொல்லத் தொடங்கும் நாளும் வந்தது. ஆனால் சபாபதி பிள்ளையவர்கள் போக முடியாத அளவுக்குக் கடுங் காய்ச்சல் ஏற்பட்டு விட்டது. அதன் விளைவாக மனவருத்தமடைந்த பிள்ளையவர்கள், தம மனைவியை அழைத்து நிலையை விளக்கினார். இதைக் கேட்டதுமே மேல் மாடிக்குச் சென்ற அம்மையார் அடிகளாரைக் கண்டு தம் கணவரின்—அவர் அண்ணனின் நிலையை விளக்கினார். உடனே தாம் சென்று, அந்தப் பிரசங்கத்தை நிகழ்த்திவிட்டு வருவதாக வாக்களித்தார். அதன்படியே அன்றைய மாலையில் மூத்தவரிடம்! விடைபெற்றுக் கொண்டு பெரிய புராணத்தோடு செட்டியார் இல்லத்துக்கு வந்தார். தம் அண்ணனின் வருகைக்காக ஆவலோடு வாசற்படியில் காத்துக்கிடந்த சோமுசெட்டியாரைப் பார்த்துத் தொழுதவண்ணம், ‘ஐயா! என் அண்ணாருக்கு உடம்பு சரியில்லாமல் போகவே இங்கு என்னை அனுப்பித்தார். வரமுடியாத நிலைமை ஏற்பட்டு விட்டதற்காகப் பொறுத்தருள விழைந்தார். என்னை இரண்டொரு பாடலை நிகழ்த்திவிட்டு

வருமாறு பணித்தார்!" என்று கருணை ததும்பிய குரலில் சொன்னார் ஆனால் சோமு செட்டியார் உள்ளம் ஆறுதல் கொள்ளவில்லை. அதேசமயத்தில், தொடங்கிய பணியை முடிக்காமல் விட்டு விடவும் மனமில்லை. இந்த இரண்டு கெட்ட நிலையில் அரை குறை மனத்தோடு சம்மதித்தார்.

பிரசங்கத்தைக் கேட்க வந்தவர் அனைவரும் அடிகளை அசட்டையோடும்ஆச்சரியத்தோடும் பார்க்கலானார்கள். உருவு கண்டு எடை போடும் உள்ளத்தைப் பெற்றிருந்த அவர்களுக்கு மத்தியிலே பிரசங்கம் புரிய ஆரம்பித்தார் அடிகள்.

மாலை ஆறு மணி அளவில் தொடங்கப் பெற்ற பிரசங்கம் முதல் யாமத்தை எட்டிப் பிடித்தது. வெல்லும் சொல்லால் அனைவருடைய அகத்தையும் கவர்ந்தார் அடிகளார்.

சோமு செட்டியார் தம்மையே மறந்தார்... அடிகளார் முன்னே கைகூப்பி நின்று, தாம் தவறாக எண்ணி இருந்ததற்கு மன்னிப்பு கேட்டதோடு, 'ஞானசம்பந்தர் சரிதையைத் தாங்களே முடித்தருள வேண்டும்!' என்றும் விழைந்து நிற்கலானார். அடிகளார் ஒப்புதல் அளித்தார். அந்த வாரத்திலிருந்து அவரே அவர் வீட்டில் பிரசங்கம் புரிந்துவரலானார்.

ஊர் தோறும் அடிகளார் புரியும் பிரசங்கத்தைப் பற்றிய பேச்சாகவே மாறியது. இதைக் கேட்ட சபாபதி பிள்ளைக்குச் சொல்லிக்கொள்ள முடியாத அளவிலை சந்தேகம். 'முறையாகக் கல்வி பயிலாதவனுக் கற்றவர் போற்றப் பிரசங்கம் புரிகிறான்?' என்ற கேள்விக் குறியோடு திரிந்தவர், ஒரு நாள் மாலை, சோமு செட்டியார் இல்லத்துக்குச் சென்று, யாருமே தம்மைக் கண்டுகொள்ளா வண்ணம் மறைவில் நின்று அடிகளார் பிரசங்கத்தைக் கேட்கலானார்...

அவ்வளவுதான்.... அங்கிருந்து நேராக வீட்டுக்கு வந்தார்... தம் மனைவியை அழைத்து, "பாப்பாத்தி! நீ என் தம்பியைப் புரிந்துவைத்துக் கொண்டிருந்த அளவுக்குக்கூட நான் புரிந்து வைத்திருக்கவில்லை. அதனாலேயே இராமலிங்கத்துக்குப் பெரிதும் தொல்லை அளித்துவந்தேன். ஆனால் இன்று உணர்ந்து விட்டேன். இராமலிங்கம் இனி என் தம்பியல்ல; உலகம் தழைக்கப் பிறந்த திருஞான சம்பந்தர்!" என்று ஆனந்தக் கண்ணீர் ததும்பக் கூறினார். அன்று முதல் அடிகளாரைத் தம் தம்பியென்று கொள்ளாமல் தெய்வமென எண்ணி அன்பு செலுத்தலானார்.

## அடிகளார் தொண்டு :

அளவிடற்கரிது; அன்பர் மனத்தில் அமர்ந்த அடிகளார், ஆங்காங்கே சென்று தம் உள்ளக் கிடக்கையை ஒப்படைக்கலானார். நெருங்கிப் பழகும் நண்பர்களுக்குத் தமிழறிவையும் சன்மார்க்க நெறியையும் உணர்த்துபவரானார். ஒற்றியூருக்குச் செல்வதும், அருட்பாடல்களைப் பாடிக் களிப்பதுமாக இருந்து வரலானார்.

அவர் நிழலில் நின்று இன்பம் பெறுவதே பேரின்பமெனக் கொண்ட தமிழறிஞர்கள் அவரைச் சூழ்ந்து நாளும் இருக்கலானார்கள். அவர்களுக்கெல்லாம் அடிகளார் தம் கருத்தினை உணர்த்தி வருவாரானார்.

ஒரு சமயம் தமிழ்ப்புலமை மிக்க காஞ்சிபுரம் சபாபதி முதலியாரவர்கள், அடிகளாரைக்கண்டு, "அடிகளே! தங்கள் தொண்டு இறையன்பு மிக்கது. வாழும் ஆன்மா விரும்பிப் போற்றப்படவேண்டியது. இருளில் தோய்ந்து கிடக்கும் தேசத்துக்குப் புத்தொளி அளிக்க வல்லது. அப்படிப்பட்ட சீரிய தொண்டு, சிறார்களின் மனத்திலேயும் பரவ வேண்டுமென்பது என் ஆசை. அந்த ஆசையை நிறைவேற்றி வைத்தருள வேண்டுகிறேன்!" என்றார். பெரியோரைக் கண்டதுமே பணியும் சுபாவம்மிகுந்த அடிகள், "ஐயா! இந்த உள்ளம் தொண்டு புரிவதற்கென்றே பிறந்தது. ஆதலால் தங்களின் விருப்பத்தை இப்போதே பூர்த்தியாக்கத்தொடங்குகிறேன்!" என்று கூறி, பெரிய புராணத்துக்குள் அமைந்துள்ள 'மனு நீதி கண்ட சோழன்' சரிதையை, 'மனு முறை கண்ட வாசகம்!' என்னும் தலைப்பில் படைத்தார். அவ்வுரைநடை நூலைக் கண்ட முதலியாரவர்கள் மெய்மறந்து போனார்.

## வள்ளலார் வாயுரை :

அக்காலப் புலவர்களிடத்தில் ஓர் ஐயம் இருந்து வந்தது. அந்தச் சந்தேகத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள விரும்பிய புலவர்கள் அடிகளாரிடம் வந்தார்கள். 'அடிகளே! எங்களுக்குள் நீண்டகாலமாக ஓர் ஐயம் இருந்து வருகிறது. வேறொன்றுமில்லை. தொண்ட மண்டலம் என்று அழைப்பது சரியா அல்லது தொண்டை மண்டலம் என்று கூறுவது முறையா?" என்றார்கள் அடிகளாரும் அவர்களிடம் தோன்றிய ஐயத்தை நீக்கும் பொருட்டுப் பல்வேறு நூல்களிலிருந்து ஆதாரத்தை எடுத்துக் காட்டி, 'தொண்டை என்பது தவறு; தொண்ட மண்டலம் என்பதே சரியானது!' என்று விளக்கமளித்தார் இதன் பிரதிபலிப்பாக விளங்குவதே, 'தொண்ட மண்டல சதகம்' என்னும் நூல். இந் நூலுக்குப் பிறகு, 'ஒழிவிலொடுக்கம்' என்னும் சிறப்பு மிக்க நூலிலுள்ள பாயிரப்பாடலுக்கு விளக்கமளித்துள்ளார். இவ்வெழுத்துப் பணியைத் தொடர்ந்து சிவநேசவெண்பா நெஞ்சறிவுறுத்தல், மகாதேவமாலை, இங்கிதமாலை போன்ற பாமாலைகளை உருவாக்கி அன்பர்களுக்குச் சூட்டி மகிழ்ந்தார் இக்காலத்தில்தான் அடிகளாரின் தொடர்பு தொழுவூர் வேலாயுத முதலியார்க்குக் கிடைத்தது.

## வள்ளலாரும் வேலாயுதமும்:

அக் காலப் புலவர்களுள் தொழுவூர் வேலாயுத முதலியாரும் ஒருவர். ஆழ்ந்த படிப்பும்

தெளிந்த நுண்ணறிவும் பெற்றிருந்த தொழுவூரார், அடிகளாரைப் பற்றிப பிறர்வாயிலாகக் கேள்விப்பட்டிருந்தும் அலட்சியமாக எண்ணி, அவர் ஞானத்தைச் சோதிக்கும் பொருட்டு, சிலேடைப் பாடல்களை இயற்றிக் கொண்டு அடிகளாரிடம் வந்து, “இப்பாடல்கள், பழைய ஏட்டுச் சுவடிகளிலிருந்து எனக்குக் கிடைத்தன. அவ்வேட்டில் சங்க காலத்துப் புலவர்கள் பாடினதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது!” என்று கூறி, தாம் கொண்டுவந்த பாக்களைக் காண்பித்தாராம். அப்பாடல்களை வாங்கிப் பார்த்த அடிகளார், தொழுவூராரை உற்றுப் பார்த்துவிட்டு,” இவை சங்கப்புலவர்களால் பாடப்பட்டவையல்ல, தமிழில் தேர்ச்சி பெறாத ஒரு கற்றுக்குட்டியால் பாடப்பட்டவை!” என்றதும் அவர் வள்ளலாரிடம் மன்னிப்புகோரி தமமை மாணவராக ஏற்றுக்கொள்ளும்படி விழைந்தாராம். இப்படித் தொடங்கிய தொழுவூரார் தொடர்பு, இறுதியில் உயிர் நட்பாக மாறி வள்ளலாரோடு இரண்டறக் கலந்தது.

## திருமணமும் திருவாசகமும் :

இப்படி, இராமலிங்க வள்ளலார் பெருமை வளர்ந்து வரும் நாளில் அவருக்குத் திருமணம் செய்து வைக்கும் முயற்சியில அவர்தம் அன்னையும அண்ணியும் தீவிரப்படலானார்கள். இருவர் முயற்சியினையும புரிந்துகொண்ட வள்ளலார் அவ்விருவரிடமும் தமக்குத் திருமணம் தேவையில்லையென்பதை ஒருமுறையல்ல, பலமுறை தெரிவித்துக் கொண்டார். இறுதியில் பெரியோர் சொற்களுக்குக் கட்டுப்பட்டு தம சகோதரியான உண்ணாமுலையம்மையின் மூத்தமகளை, ஆமா; தனக்கோட்டியம்மையை மணம் புரிந்து கொண்டார் ஊருக்குக் கட்டுப்பட்டு செய்து கொண்ட திருமணத்தால் அவர் கண்ட தென்ன? ஒன்றுமில்லை என்பதை அவருக்குத் திருமணம் செய்து வைத்த பெரியோர் அன்றைய இரவே கண்டு உணர்ந்தார்கள்.... முதலிரவன்று சிற்றின்ப வாழ்வை ஒதுக்கி வைத்துவிட்டு, பேரின்ப வாயிலுக்குத் திறவுகோலாக விளங்கும் திருவாசகத்தை மனம் நெகிழப்பாடிக் கொண்டிருக்கலானார்...

## அடிகளார் அகம் :

வள்ளலார் அகமானது, பிறருக்குத் தொண்டு புரியவே பெரிதும் விருபபியது, ‘இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல்’ என்னும் குறளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது; ஒருவரை யொருவர் பகைத்து வாழும் கொடுமையை எண்ணி வருந்தியது, ஆருயிர்களெலாம் அன்பு செய்ய விழைந்தது. தில்லை நடராசரையும் சிவகாமியம்மையையும் பெற்றோராக எண்ணிப் பேசியது; ஆசைக்கு அப்பாற் பட்டது; பொருளைப் பெரிதாக நினையாமல், அப்பொருள் கிடைத்த சமயத்திலெல்லாம்

கிணற்றிலும் குளத்திலும் கேணியிலும் எறிந்தது! 'பசித் திரு; விழித்திரு!' என்ற உண்மையை நவின்றது; உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவோரைத் திருத்த [illegible] னைகதது; உத்தமர் உறவைப் பெரிதும் விழைந்தது; அருட்ஜோதி வடிவில் இறைவனைக் கண்டது; பசியென்கிற ஆபத்தை நீக்க முயன்றது; தருமசாலையைக் காண விழைந்தது; உயிர்களிடத்தில் அன்பாய் இருக்கவேண்டுமென்று போதித்தது; சமரச சன்மார்க்க நெறிகளை உலகெங்கிலும் பரவ விரும்பியது, ஜாதி சமயப் பூசல்களைக் கடிந்துரைத்தது. ஒழுக்கத்தை ஓம்பியது; எல்லா உயிர்களையும் தம்முயிர்போல் எண்ணிச் செயல் புரிந்தது; தீயவை களைந்து நல்லவை மலர எல்லாம் வல்ல இறைவனை நினைத்தபோதெல்லாம் வேண்டியது; சுருங்கக்கூறினால் எல்லா உயிர்களுக்கும் உடம்பாகி நின்றது.

## ஒளியின் நிழலில் :

உண்மையைக் கண்டு வழிபட்டவர் ஆயிரக்கணக்கானோர். அவர்களிலே நால்வர் சிறப்பிடம் பெற்றவராவர் அந்நால்வரிலும் முதன்மை பெற்று விளங்கிய பெருமை, ஆணவத்தோடு வந்து வள்ளலாரிடம் அடைக்கலமாகி விட்ட தொழுவூராரையே சாரும். 1863 ஆம் ஆண்டில் வள்ளலார் பாக்களை நான்கு திருமுறைகளாக வகுத்துக் கொடுத்த பெரியார் இவரே. இவரைப் போலவே வாழ்ந்து காட்டிய பெரியவர்களில் புதுவை வேலு, சிவானந்தபுரம் செல்வராயர், இரத்தினம் என்கிற மூவரும் குறிப்பிடத்தக்கவர்களாவர் இந்நால்வரின் பெருமுயற்சியினால்தான் வள்ளலார் காலத்திலேயே நான்கு திருமுறைகள் வெளிவந்தன இவ்வுண்மையை அவரவர் வரலாற்றுக் குறிப்பின் வாயிலாகக் கண்டு மகிழலாம்

## அருட்பாவிற்கு மருட்பா!

இராமலிங்க வள்ளலார் இயற்றிய அற்புதப் பாடல்களுக்கு, 'திருவருட்பா!' என்னும் மகுடஞ் சூட்டி மகிழ்ந்தனர், அவரோடு ஒன்றி இருந்த அன்பர்கள். இச்செய்தியைக் கேட்டறிந்த ஆறுமுக நாவலரும் அவர்தம் சீடர்களும, 'தேவாரம், திருவாசகம் போன்ற திவ்விய நூல்களுக்குத்தான், திருவருட்பா என்னும் பெயர் பொருந்தும். இராமலிங்கம் பாடல்களுக்கு அது பொருந்தாது!' எனும் எதிர்ப்புணர்ச்சியோடு 'மருட்பா'வை உருவாக்கி வெளியிட்டனர். அப்படி எதிர்ப்புணர்ச்சி காட்டிய அவர்களே சில காலத்துக்குள்ளாக, உண்மை உணர்ந்து வள்ளலார் பாடல்களைப் போற்றிப் பாராட்டுவோரானார்கள்.

அப்படி அனைவருமே போற்றிப் புகழப் பணிபுரிந்த அடிகளார் 1874 ஆம் ஆண்டு, தை மாதம் 19 ஆம் நாள் எடுத்த பிறப்பை உதறித் தள்ளிவிட்டு பிறப்பொன்றில்லாத பெருங்கருணைக் கடலோடு ஐக்கியமாகிவிட்டார்.

# பாடப் புத்தகங்கள் மாறுதல் கிடையாது

சென்ற வருடம் வைத்த பாடப் புத்தகங்களையே இந்த ஆண்டும் தொடர்ந்து வைத்துக்கொள்ளும்படி அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

## சமூகப் பாடப் புத்தகங்கள்

G.O. No. R.C. 687 தேதி 28-4-1965 அரசாங்க உத்தரவில் சென்ற ஆண்டு வைத்துள்ள சமூகப் பாட புத்தகங்களையே இவ்வாண்டுப் தொடர்ந்து வைத்துக்கொண்டு, அவற்றிலுள்ள சரித்திர, பூகோளம் பாடங்களைத் தனித்தனியே சொல்லிக் கொடுக்கும்படி உத்தரவிட்டுள்ளனர். அதைப்புரிந்துக் கொள்ளாமல் பல ஆசிரியர்கள் தனித்தனியே சரித்திர, பூகோள பாடப் புத்தகங்களை அனுப்பும்படி எழுதி வருகிறார்கள். இது தவறு.

அடுத்த ஆண்டு புதிய பாட திட்டம், அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்டபின் புத்தகங்கள் எழுதி, அவைகள் அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப் பட்ட பிறகுதான் வெளியிடப்படும். இன்னும் அரசாங்கத்தாரால் புதிய பாட திட்டம் வெளியிடப் படவில்லை. ஆதலால் ஏற்கனவே உள்ள சமூகப் பாட புத்தகங்களை வைத்துக் கொண்டு, மேற்படி அரசாங்க உத்தரவின்படி சரித்திரத்தையும், பூகோளத்தையும் தனித்தனியே போதிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம் —ஆசிரியர்

## "ஆரம்பக் கல்வி" பத்திரிகை இனாம்

சென்ற ஆண்டு எமது வேண்டுகோளுக்கிணங்கி, பற்பல எயிடெட் பாடசாலை மானேஜர்களும், தலைமை ஆசிரியர்களும், எமது பாடப் புத்தகங்களை வைத்து ஆதரித்தமைக்கு எமது அன்பு கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அம்மாதிரியே 1965-66 ஆண்டுக்கும் மீண்டும் எமது பாட புத்தகங்களைத் தொடர்ந்துவைத்து எமது பத்திரிகையை ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

இவ்வாண்டும் எமது பாட புத்தகங்களைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளும் தலைமை ஆசிரியர்கள், 1965-66-க்குத் தொடர்ந்து வைத்துக்கொள்வதாக, நமது அலுவலகத்திற்கு ஜூலை 31-ம் தேதிக்குள் ஒரு கார்டு மூலம் தகவல் அனுப்புமபடி கேட்டுக் கொள்ளுகிறோம். அவ்விதம் தகவல் அனுப்பும் பாடசாலையின் பெயர்கள் 1965-66 ஆண்டிக்கு மறுபடியும் புதிதாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வழக்கம்போல நமது ஆரம்பக் கல்வி பத்திரிகையை இனாமாகத் தொடர்ந்து அனுப்பப்படும். புத்தகங்கள் வாங்கும் புத்தகக் கடை ரசீதுகளை (Cash Bills) அலுவலகத்திற்கு 1965 ஜூலைமாதம் 31ஆம் தேதிக்குள் அவசியம் அனுப்பிவிடவும். சென்னை அலுவலகத்திற்கு அனுப்பப்படும் ஆர்டர்களுக்கு Billகள் அனுப்பத் தேவையில்லை. ஆர்டர்களைக்கொண்டே பெயர்களை ரிஜிஸ்டர் செய்யப்படும்.

எமது

# வெளியீடுகள்

ஆரம்ப, உயர்தரப் பாடசாலைகளுக்கு
உயர் நிலைப்பள்ளிகளுக்கு

## 1965

## "ஆரம்பக்கல்வி" இனும்!

---

ரூ. 100-க்கு குறையாமல் எமது பாட புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும் எய்டெட் ஆரம்பப் பாடசாலைகளுக்கு, "ஆரம்பக் கல்வி" மாதப் பத்திரிகை இனமாக மாதா மாதம் அனுப்பி வைக்கப் படும்.

---

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
("ஆரம்பக் கல்வி" நிலையம்)
94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை—1.
தபால் பெட்டி எண் 1818. டெலிபோன் எண்: 24544.

ஆரம்பப்பள்ளிகளுக்கு :

## திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

ஆசிரியர் :

த. சே. உமாபதி, M.A.,L.T.

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1·25 | 25 | 10-5-'61 |

## இலக்கணமும் மொழிப் பயிற்சியும்

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனார்.

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 0·75 | 4 | 16-5-'62 |

## சிறுவர் கணக்கு நூல்

(புதிய பாடத் திட்டப்படி)

ஆசிரியர் : பி. வீரராகவன்

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0·50 | ... | ... |
| மூன்றும் வகுப்பு | 0·75 | 43 | 13-5-'59 |
| நான்காம் வகுப்பு | 0·87 | 25 | 13-5-'59 |
| ஐந்தாம் வகுப்பு | 1·25 | 39 | 15-5-'60 |

## புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர் : A. C. பாலசுந்தரம், B.A., L.T.

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1·50 | 28 | 10-5-'61 |
| ஏழாம் வகுப்பு | 1·75 | 13 | 16-5-'62 |

# சிறுவர் சமூக நூல்

(புதிய பாடத் திட்டப்படி)

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0·62 | ... | ... |
| மூன்றாம் வகுப்பு | 0·75 | ... | ... |

ஆசிரியர் : த. சே. உமாபதி, M. A., L. T.

| | | | |
|---|---|---|---|
| **நான்காம் வகுப்பு** | | | |
| **மாவட்டங்கள்** | | | |
| சென்னை | 1·87 | 44 | |
| செங்கற்பட்டு | 1·87 | 44 | |
| வட ஆற்காடு | 1·87 | 44 | |
| தென் ஆற்காடு | 1·87 | 44 | |
| சேலம் | 1·87 | 44 | 13-5-'59 |
| கோயம்புத்தூர் | 1·87 | 44 | |
| நீலகிரி | 1·87 | 46 | |
| திருச்சிராப்பள்ளி | 1·87 | 46 | |
| தஞ்சாவூர் | 1·87 | 46 | |
| மதுரை | 1·87 | 22 | |
| இராமநாதபுரம் | 1·87 | 22 | |
| திருநெல்வேலி | 1·87 | 22 | 16–5–'62 |
| கன்னியாகுமரி | 1·87 | 22 | |
| ஐந்தாம் வகுப்பு | 1·75 | 43 | 18–5–'60 |

## சமூக நூல்

ஆசிரியர் : துரை பழனிவேல், M.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 1.75 | 14 | 10-5'-61 |

ஆசிரியர் : த. சே. உமாபதி, M.A., L.T.

| | | | |
|---|---|---|---|
| ஏழாம் வகுப்பு | 2.00 | 18 | 16–5–62 |

# சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர் : R. சேஷாத்திரி, B.A., B.T.
(இராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப்பள்ளி, தியாகராய நகர்.)

நான்காம் வகுப்பு

ஜில்லா வட்டங்கள்

| | |
|---|---|
| சென்னை | 0·75 ந. பை |
| செங்கற்பட்டு | 0·75 ந. பை. |
| வட ஆற்காடு | 0·75 ந. பை. |
| தென் ஆற்காடு | 0·75 ந. பை. |
| சேலம் | 0·75 ந. பை. |
| கோயம்புத்தூர் | 0·75 ந. பை. |
| நீலகிரி | 0·75 ந. பை. |
| திருச்சிராப்பள்ளி | 0·75 ந. பை. |
| தஞ்சாவூர் | 0·75 ந. பை. |
| மதுரை | 0·75 ந. பை. |
| இராமநாதபுரம் | 0·75 ந. பை. |
| திருநெல்வேலி | 0·75 ந. பை. |
| கன்னியாகுமரி | 0·75 ந. பை. |
| ஐந்தாம் வகுப்பு | 0·94 ந. பை. |
| ஆறும் வகுப்பு | 0·87 ந. பை. |
| ஏழாம் வகுப்பு | 0·75 ந. பை. |
| எட்டாம் வகுப்பு | 1·00 ந. பை. |

# இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசிரியர் : பி. வீரராகவன்

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0·37 | ... | ... |
| மூன்றும் வகுப்பு | 0·44 | ... | ... |

ஆசிரியர் : M. விவேகானந்தா, B.Sc., L.T.

| | | | |
|---|---|---|---|
| நான்காம் வகுப்பு | 0·62 | 30 | 13-5-'59 |

# சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர் : K. லக்ஷ்மிநாராயணசாமி, B.A., L.T.

| | | | |
|---|---|---|---|
| ஐந்தாம் வகுப்பு | 1·25 | 26 | 18-5-'60 |

# பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : K. லக்ஷ்மிநாராயணசாமி, B.A., L.T.

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1·50 | 30 | 10-5-'61 |

துணைப்பாடப் புத்தகங்கள்

## சிறுவர் அறிவுக் கதைகள்

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனார்

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| ஐந்தாம் வகுப்பு | *0·50* | *15* | *18-5-'60* |

## நீதிக் கதைகள்

ஆசிரியர் : வித்துவான் இ. மு. ஆறுமுக செட்டியார்

| | | | |
|---|---|---|---|
| ஐந்தாம் வகுப்பு | *0·50* | *17* | *18-5-'60* |

## அறிவுச் சுடர்

ஆசிரியர் : த. சே. உமாபதி, M.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | *0·62* | *10* | *10-5-'61* |

MOTHER INDIA SUPPLEMENTARY READER

(By Mrs. Lucy Arulraj)

| | | | |
|---|---|---|---|
| VI STANDARD | 0-50 | 13 | 10-5-'61 |

FOR HIGH SCHOOLS

உயர் நிலைப் பள்ளிகளுக்கு

## திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

ஆசிரியர் : த. சே. உமாபதி, M.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | *1·25* | *25* | *10-5-'61* |
| எட்டாம் வகுப்பு | *1·75* | *21* | *13-5-'59* |

## புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர்: A. C. பாலசுந்தரம், B.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | *1·50* | *28* | *10-5-'61* |
| ஏழாம் வகுப்பு | *1·75* | *13* | *10-5-'65* |

## சமூக நூல்

ஆசிரியர் : துரை பழனிவேல், M.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | *1·75* | *14* | *10-5-'61* |

## சமூக நூல்

ஆசிரியர் : த. சே. உமாபதி, M.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| ஏழாம் வகுப்பு | *2·00* | *18* | *16-5-'62* |
| மூன்றும் படிவம் | *2·00* | *24* | *10-5-'61* |
| பழைய எட்டு—புதிய ஒன்பதாம் வகுப்பு | *2·50* | *35* | *16-5-'62* |

## இலக்கணமும் மொழிப் பயிற்சியும்

| | | | |
|---|---|---|---|
| மூன்றும் படிவம் | *0·75* | *4* | *10-5-'61* |

## பொது விஞ்ஞானம்

ஆசிரியர்: K. LAKSHMINARAYANASAMI, B.A., L.T.

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1·50 | 30 | 10-5-'61 |
| புதிய பதினோராம் வகுப்பு | 2·50 | 35 | 10-5-'61 |

## இலக்கணமும் மொழிப் பயிற்சியும்

ஆசிரியர்: புலவர் சொ. முருகேசனர்

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 0·75 | 4 | 16-5-'62 |

## மாணவர் இலக்கணம்

| | | | |
|---|---|---|---|
| புதிய ஒன்பதாம் வகுப்பு | 0·87 | 4 | 29-7-'59 |

## இலக்கணம் கட்டுரை மொழிப் பயிற்சி

| | | | |
|---|---|---|---|
| புதிய பத்தாம் வகுப்பு | 1·25 | 11 | 18-5-'60 |
| புதிய பதினோராம் வகுப்பு | 1·50 | 31 | 10-5-'61 |

## ENGLISH NON-DETAILED

By Mrs. Lucy Arulraj

| | | | |
|---|---|---|---|
| Mother India Supplementary Reader VI Std. | 0·50 | 13 | 10-5-'61 |
| Mother India Supplementary Reader III Form. | 0·62 | 24 | 10-5-'61 |

## TAMIL NON-DETAILED

## அறிவுச சுடர்

ஆசிரியர்: த. சே. உமாபதி, M.A., L.T.

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 0·62 | 10 | 10-5-'61 |
| நாடும் மக்களும் | 1·00 | 17 | 18-5-'60 |
| தொண்டை நாட்டு மன்னர் | 1·00 | 19 | 18-5-'60 |
| பூம்புகார் | 0·87 | 16 | 10-5-'61 |
| திரு. வி. க. | 0·87 | 23 | 13-5-'59 |

ஆசிரியர்: லீலா பார்த்தசாரதி, B.A., L.T.

| | | | |
|---|---|---|---|
| கணிதம் கற்பிக்கும் முறை | 2·00 | 2 | 5-7-'61 |

## சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர்: R. சேஷாத்திரி, B.A., B.T.

| | |
|---|---|
| ஆறும் வகுப்பு | 0·87 ந. பை. |
| ஏழாம் வகுப்பு | 0·75 ந. பை. |
| எட்டாம் வகுப்பு | 1·00 ந. பை. |
| ஒன்பதாம் வகுப்பு | 1·25 ந. பை. |
| பத்தாம் வகுப்பு | 1·25 ந. பை. |
| பதினோராம் வகுப்பு | 1·50 ந. பை. |

---

Edited Printed and Published by. P. VEERARAGHAVAN,
Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.